பதின்நான்கு பக்கங்கள் விலை ரூபா நான்கு

மலிவு விற்பனை
அன்பளிப்புகள்
வற்றாத அருள்கொண்ட
வற்றாப்பழை கண்ணகை
பொங்கல் தினத்தன்று
ஆலயத்தில் மில்க்வைற்
மேலுறைகளுக்குப்
பெறுமதியான அன்பளிப்புகள்
இன்றே மேலுறைகளைச்
சேகரியுங்கள்
—மில்க்வைற் யாழ்ப்பாணம்

வார
முரசொலி

மாணவ மணிகளே!
மில்க்வைற் மேலுறை
25 அனுப்பி
நீதிநூல்
அல்லது
அப்பியாசக்கொப்பி
ஒன்று பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

முரசு 04 ஒலி 111 ஞாயிற்றுக்கிழமை 27 - 05 - 1990 வைகாசி 13 துல்ஹஃதா 02

# ஈ.பி.ஆர்.எல்.எப். உடன் பேச

# ஜனாதிபதி பிரேமதாஸ மறுப்பு

**ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினரை சந்தித்து பேச ஜனாதிபதி பிரேமதாஸ மறுப்புத் தெரிவித்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஜனாதிபதியை சந்திக்க ஈ. பி. ஆர். எல். எப் பினர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இவ்வாரம் சந்திப்பு நிகழலாம் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி அவர்களது வேண்டுகோளை நிராகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளுடன் அதிருப்தியைத் தேடிக் கொள்ள விரும்பாததாலேயே ஜனாதிபதி இம் முடிவை மேற்கொண்டதாக தெரியவருகின்றது.

## மினிபஸ் பயணிகள் மீது ஆட்டு ஜலம் அபிஷேகம்

மினிபஸ் கூரையிலிருந்த ஆட்டின் ஜலம் பஸ்ஸின் மேல் துவாரங்களூடாக கசிந்து பிரயாணிகளை அபிஷேகம் செய்த சம்பவம் நேற்று 750 இலக்க மினிபஸ் ஒன்றில் நடைபெற்றுள்ளது. இறைச்சிக்காக மினிபஸ் கூரையில் கொண்டு சென்ற ஆடுகளே இவ்வாறு பிரயாணிகள் மீது அபிஷேகம் செய்தன, இதனால் மேற்படி பஸ் சாரதிக்கும் பிரயாணிகளுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. (39)

## வீதி திருத்த வேலைகளை மக்கள் திரண்டு மறிப்பு

நாட்டிலுள்ள வீதிகளெல்லாம் நவீன மயப்படுத்தப்படும் வேளையில், வீதியொன்று பழமைமயப் படுத்தப்படும் விந்தையொன்றும் நிகழ்கின்றது இந்த விநோதம் இளவாலையில் நடைபெறுகிறது.

சேந்தான்குளம் — சண்டிலிப்பாய் வீதி ஏறக்குறைய 50 ஆண்டு காலமாக தார் றோட்

—14ஆம் பக்கம் பாக்கக

## விடுதலைப்புலிகள் மகளிர் மாநாடு

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினரின் மாநாடு இன்று யாழ் நகரில் ஆரம்பமாகியது இந்த முதலாவது யாப்பு மாநாடு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

## ஜூண மாதத்திற்குள் வீடுகள் கட்டி முடிக்க வேண்டும்

87 ம்,88 ம்,89 ம், ஆண்டு தேசிய அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து, வீடமைப்பு கடனைப் பெற்றுள்ளவர்கள் ஜூன் மாத இறுதிக்குள் வீடுகளை பூர்த்தியாக்காமல் இருப்பின் அவர்களுக்கான மீதிக் கொடுப்பனவுகளைக் கொடுப்பதற்கு அனுமதி

—14 ஆம் பக்கம் பார்க்க

## சில கூட்டுறவு சங்கங்கள் நேற்று மா விற்பனை நிறுத்தம்

நேற்றைய தினம் ஒரு சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மா விற்பனையை நிறுத்தியுள்ளன திங்கள் முதல் மா வினது விலை அதிகரிக்கவுள்ளது என அறிவிக்கப்பட்டதையடுத்தே மேற்படி விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது.

—14 ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதியில் எரிபொருள் விற்பனை அதிகரிப்பு

வடபகுதியில் ஏற்பட்டுள்ள வாகன பாவனை அதிகரிப்பினால் எரிபொருளின் விற்பனை பெருமளவு அதிகரித்துள்ளது. எப்பேபாதும் இல்லாத அளவு எரிபொருள் விற்பனை தற்போது நடைபெற்று வருகின்றது,

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் தற்போது எரிபொருள் விநியோகம் இடம் பெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் கிளிநொச்சி

—14 ஆம் பக்கம் பார்க்க

## ஆறாவது திருத்தச்சட்டம் நீக்க ஸ்ரீ.சு. கட்சிவிதிக்கும் நிபந்தனைகள்

ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி வாக்களிப்பதற்கு மூன்று நிபந்தனைகளை விடுதலைப்புலிகளுக்கு விதித்துள்ளது.

ஒற்றையாட்சியை புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் ஆயுதங்களை கைவிட வேண்டும் தமிழர் அல்லாதவரையும் வட,கிழக்கு மாகாணத்தில் குடியமர்த்த விடவேண்டும். இந்நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டாலே ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க ஸ்ரீலங்கா சுததிரக்கட்சி முன்

— 14 ஆம் பக்கம் பார்க்க

## தொழில் முயற்சிகளுக்கு இலங்கை வங்கி கடனுதவி

''எமது பகுதியில் லாபகரமான தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும், பெற்ற கடனை திருப்பி செலுத்தக் கூடியவர்களுக்கும் இலங்கை வங்கி நிச்சயம் கடனுதவி வழங்கும்'' இவ்வாறு இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் திரு கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று நல்லூர் சாதனா மகா வித்தியாலயத்தில் முறைசாரா கல்விப்பிரிவில் பயின்ற

— 14ஆம் பக்கம் பார்க்க

## நெருக்கடி நிலைமையிலும் கைதிகள் விடுதலை - ஆஞ்சி

''இன்றைய எமது நெருக்கடியான நிலையில் கூடநாம் கைதிகளை விடுவித்துவருகின்றோம். சரணடைந்தவர்களும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்களும் திருத்தப்பட்டு பூரணமனிதனாக்கப்பட்டு உங்களிடம் ஒப்படைக்கின்றோம்.''

இவ்வாறு நேற்று யாழ். பெருமாள் கோவிலடியில் இடம் பெற்ற கைதிகள் விடுவிப்பு நிகழ்ச்சியில் பேசிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சிநேயர் தெரிவித்தார்.இக்கைதிவிடுவிப்பில் திரு. பொன் மாஸ்டரும் கலந்து கொண்டார், 108 கைதி

— 14 ஆம் பக்கம் பார்க்க

## ரயில், விமானம் மூலம் வடபகுதி முகாம்களுக்கு வெற்றுச் சாக்குப் பைகள் குவிப்பு

பலாலி இராணுவ முகாமிற்கு 300 க்கு மதிகமான சிங்கள இராணுவத்தினர் நேற்று வந்திறங்கியுள்ளதாக தெரியவருகின்றது. பெரும் தொகையான சாக்குகள்,பொலித்தீன்பைகள் போன்ற பொருட்கள் ரயில் மூலமும் விமானமூலமும் ஹெலிகொப்டர் மூலமும் கொண்டுவரப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. சிங்கரெஜிமென்ற் கமுனுரெஜிமென்ற் படைப்பிரிவைச் சேர்ந்த இந்த புதிய இராணுவத்தினருக்கு முன்னால் பொலநறுவ மாவட்ட இரண்டாவது இராணுவ அதிகாரி ஜெயசேகரா தலைமைவகிப்பதாகவும் தெரியவருகின்றது.இதே வேளை 100 இராணுவத்தினர் பலாலி முகாமை விட்டு வெளியேறியுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது.(04) (48)

## COMPUDATA
**(PRIVATE) LIMITED**

### COMPUTER COURSES COMMENCING SHORTLY

| Batch | Course | Commencing on | Lecture Time | Practical Hrs |
|---|---|---|---|---|
| 01 | Word Star | 29 . 05 .1990 | Tue, Thu, Fri 5.30 — 6.30 p.m | 25 |
| 02 | Lotus123 | 28 . 05 . 1990 | Mon, Wed, Fri 7.00 — 9.00 a.m | 30 |
| 03 | Lotus123 | 26 . 05 . 1990 | Sat, 2—5 p.m Sun 9—12 noon | 30 |
| 04 | dBASE III+ | 06 . 06 . 1990 | Mon, Wed, Fri 6.00—7.30 p.m | 40 |

| Course | 1st Inst | 2nd Inst | Total |
|---|---|---|---|
| WS | 1,500 | 1000 | 2,500 |
| Lotus | 1,500 | 1300 | 2,800 |
| d BASE III+ | 2,500 | 1300 | 3,800 |

**Further detail: The Course Director**
**11. St. Lucias Street, Colombo. 13**

Enter Today to the world of Tomorrow

05134

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வி திணைக்களம்- நல்லூர்.யாழ்ப்பாணம்

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணமாவட்டப் பாடசாலைகளில் கட்டட வேலைகள்.

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 12-ம் திகதி (12—06—1990) மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 08ஆம் திகதி (08—06—1990) பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா ஐம்பதும், (ரூபா 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்று ஐம்பதும் (ரூபா 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் பணம் ரூபா ஐம்பதும் பணமாக கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்வி வைப்புப் பணம் வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1990-ம் ஆண்டு யூன் மாதம் 12-ம் திகதி (12—06—1990) முற்பகல் 10.30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும், அச்சமயம் கேள்விக் காரர்கள் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றித் தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப்படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1990—05—25.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. யா/கோண்டா வில் றோ. க. த. க. பா. | 20'×10' கட்டிடம் | 100, 000. 00 |
| 2. யா/கொழும்புத்துறை துரையப்பா ம. வி. | ,, ,, | ,, ,, |
| 3. யா/நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தி. | ,, ,, | ,, ,, |
| 4. யா/காங்கேசன்துறைம.வி. | ,, ,, | ,, ,, |
| 5. யா/பொலிகண்டி அ. மி. த. க. பாடசாலை | ,, ,, | ,, ,, |
| 6. யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி | ,, ,, | ,, ,, |
| 7. யா/வல்வெட்டி அ. மி. த. க. பா. | ,, ,, | ,, ,, |
| 8. யா/விடத்தப்பளை கமலாசினி வித்தி. | ,, ,, | ,, ,, |

05172

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

24.05.90 அன்று யாழ் நகரிலிருந்து பிரதான வீதியூடாக சாவகச்சேரி செல்லும் வேளை, டயரி தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள், பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு, டயரியை ஒப்படைப்பின் தகுந்த சன்மானம் வழங்கப்படும். மண்டேலா புக் சென்றர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.

(05178)

### WANTED

Jaffna hindu velala parents seek partner from a respectable family for their youngest son, 29 years, qualified accountant (ACMA, AIDPM) working in a leading firm in Colombo. Brothers and sisters are in good position. Apply with deatiles C/o murasoli advertisment No294 Jaffna. 05155

### தேவை

மிக விரைவாக வளர்ந்து வரும் ஸ்தாபனத்திற்கு வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள்தேவை நல்ல சம்பளம் வழங்கப்படும், 28. 05. 90 காலை நேரில் விண்ணப்பிக்கவும் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், 19/3 கொழும்புத்துறை வீதி, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் வீதி) சுண்டுக்குளி 05172

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## EFFECTIVE ENGLISH WITH GRAMMAR

அனைவருக்கும் எளிதாக விளங்கக் கூடிய முறையில் ஆங்கில இலக்கணத்துடன் கூடிய Effective English with Grammar-6 மாத கால பயிற்சி G.C.E(O/L)மாணவர் நலன் கருதி தபால் மூலம் நடத்தப்படுகின்றது.

எமது பயிற்சியினை திறம்படச் செய்யும் மாணவர்கள் British Council உடன் இணைந்து University of Cambridge நடத்தும் First in English Certificate (London) or Proficiency in English Certificate (London) எனும் பரீட்சைக்கு தயாரிக்கும் பயிற்சிகளையும் உள்ளடக்கிய தமிழ் விளக்கங்களுடன் கூடிய பாடத்திட்டமாகும்.

G.C.E(O/L) மாணவர்கள் திறமை சித்தி பெற இப்பாடத்திட்டம் மிக மிக உறுதுணையானதாகும். ஆறுமாத கால மொத்தக்கட்டணம் ரூபா450/—ஆகும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன், இடது பக்க மூலையில் Effective English என எழுதி தொடர்பு கொள்க.

**Bright Training Centre**
**P. O. Box 162,**
**COLOMBO.**

05162

## STRUCTURED BASIC COMPUTER
# PROGRAMMING

கொம்பியூட்டர் கலையை பயிலும் மாணவர்கள் தகுந்த கைநூல்கள் தமிழில் இல்லையே? என்ற கவலையை மாற்றும் நோக்குடனும், கொம்பியூட்டர் என்றால் என்ன? எவ்வாறான தொழில்பாடுகளை மேற்கொள்கிறது, எந்தெந்த வகையில் மனிதனுக்கு உதவி அளிக்கின்றது என்பவற்றுடன். ...

BASIC மொழியின் பூரண விளக்கங்களும் பயிற்சி திட்டங்களும் அடங்கியதான தமிழ் மூலம் பயிற்சி திட்டம் நீங்கள் எங்கு கொம்பியூட்டர் கல்வியை பயின்றாலும் எமது பாடத்திட்டம் உங்களுக்கு பயிற்சிக்கான முழு விளக்கங்களையும் தமிழில் தருவதால் நீங்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வல்லமை அளிக்கின்றது.


எமது பாடத்திட்டத்திற்கான காலம் மூன்று மாதமேயாகும். மூன்று மாதங்கட்கும் தபால் மூலம் போதனைகள் வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூபா 150/- மாத்திரமேயாகும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு:

S. B. C. P.

**Bright Training Centre**
**P. O. Box 162**
**COLOMBO**

05161




# பறவைகளின் வாழ்க்கை முறையைப் படம்பிடித்த கவிஞன்

கம்பன் உவமையும், பொருளுமாகப் பறவைகளைக் கண்டகாட்சி பற்பலவாகும். அவன் கண்ட பறவைகள் அன்னம், மயில், கோழி, அன்றில், புறா, கொக்கு, குருவி, சக்கரவாகம், கின்னரமிதுனம், கிளி. பூவை, நாரை என்றிங்ஙனம் பலவாகும்.

இப்பறவைகளின் வாழ்க்கை முறைகளைப் படம்பிடித்து அவ்வப்போது தான் சொல்லும் நிகழ்ச்சிகளின் ஊடே அக்காட்சிகளைக் காட்டி நம்மையும் நினைக்கும்படி செய்கிறான் கம்பன். இதோ ஒரு அன்னக்காட்சி.

நாட்டுப்படலத்தே "போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை" என்று தொடங்குவான். இவ்வன்னம் மேல் உண்ட ஒண்கணார் போலத் திரிகின்றதாம். நவநாகரிக நங்கையர்களைப் போலப் பிள்ளையைப் பெற்றுத் தாமரைப் பூப் படுக்கையிலே உறங்க வைத்துவிட்டு அதைப் பற்றிய கவலை சிறிதும் இன்றித் திரிகின்றது; நல்லகாலம் அந்த அன்னக்குஞ்சுகள் அப்பொய்கையிடத்தே வந்த எருமைகள் தம் கன்றை நினைந்து சொரிந்த பாலை உண்டு அப் பூப் படுக்கையிலே உறங்குகின்றன. பச்சைத் தேரைகள் அத்தாமரைத் தாளை ஆட்டுகின்றன. தம் தாலை (நாக்கை) ஆட்டுகின்றன, பாட்டுப்பாடித் தொட்டிலை ஆட்டி உறங்க வைக்கின்றன. பெற்றபிள்ளையைப் பேணித் தாமே காக்காமல் பிறர் பொறுப்பில் பாலும், ஓலும் பெற்று அப்பிள்ளைகள் வளரத் தமக்குச் சிறிதும் கவலையில்லாமல் சுற்றித் திரியும் நங்கையரை இந்த அன்னப்பறவைகள் நமக்கு அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்தக் காட்சியை நக்ரகுக் காட்டியதாலோ என்னவோ கொஞ்சம் பொறுப்புள்ள அன்னப்பறவைகளை இறுதியாகக் காட்டுகின்றான்.

அகழிப்போர் நடக்கிறது. சேனைகள் அகழியில் கோர யுத்தம் செய்கின்றன. தாமரைத்தாள்கள் அறுகின்றன. வண்டுகள் எல்லாம் பயந்து ஓடுகின்றன. அன்னப்பறவைகள் அத்தாமரைப் பூவிலே தாம் இட்டுவைத்த முட்டைகளை வாயிலே கவ்விக் கொண்டு ஓடுகின்றன என்று யுத்தகாண்டத்தில் ஒரு காட்சியைக் காட்டுகின்றான். அன்னத்திலே தொடங்கி அன்னத்திலே முடிகிறது பறவைக் காட்சி.

கம்பன் காட்டும் வேறு சில பறவைக் காட்சிகளைக் காண்போம்;

இங்கே ஒரு திருப்பள்ளி எழுச்சி நடைபெறுகிறது. இது ஒரு வினோதமான பள்ளி எழுச்சி. திருமண வீட்டிலே நடக்கிற பள்ளிஎழுச்சி. அதிகாலை முகூர்த்தம் போலும், குயிற் பறவைகள் திருமணம் செய்கின்றன. அங்கே மகளிர் அரங்கிலே நடனம் ஆடுவது போல மயில்கள் ஆடுகின்றன. அரச அன்னம் பல மலர்ப்படுக்கையில் நின்றும் தூக்கத்தில் இருந்து எழுகின்றன. அதனைத் திருப்பள்ளி எழுச்சி செய்ய வண்டுகள் காலையில் பாடவேண்டிய செவ்வழிப் பண்ணைப் பாடுகின்றன. எங்கே என்று கேட்டுவிடாதீர்கள். இந்தத் திருப்பள்ளி எழுச்சியைப் பார்க்கவேண்டுமானால் கம்பன் கண்ட கோசல நாட்டுச் சோலைக்குச் செல்ல வேண்டும்.

பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியன்

"குயில் இனம் வதுவை
செய்ய
கொம்பிடைக் குனிக்கும்
மஞ்ஞை
அயில் விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்கு அழகு செய்ய
பயில் சிறை அரச அன்னம்
பல்மலர்ப் பள்ளி நின்றும்
துயில் எழ தும்பி காலைச்
செவ்வழி
முரல்வ சோலை"

(நாட்டுப்படலம் 14)

அதோ ஒரு கற்பகச் சோலை அங்கே ஒரு பெண் புறா மறைந்து தங்கி இருக்கிறதே ஆ! ஏன் இந்தப் பேடை இங்கே மறைய வேண்டும்? கோபுர வாயிலின் மேல் இருக்கக் கூடிய புறா சோலையில் வந்து மறையக் காரணம் என்ன என்றா கேட்கின்றீர்கள். இந்தக் கதையை, காட்சியை முதலில் இருந்து பார்க்க வேண்டும். இந்தப் பெண்புறா முதலில் ஆண்புறாவைக் கூவி அழைத்தது. அது வரவில்லை அன்பில்லாமையால் அல்ல; அந்தக் கோபுர வாயிலிலே உள்ள சத்திரத்தில் உள்ள பெண்புறாவைத் தன் பேடை என்று நினைத்து மயங்கி அங்கேயே தங்கிவிட்டது. அக்காட்சியைப் பெண்புறா பார்த்தது. நம்முடைய சேவல் வேறொரு பெண்புறா விடத்து அன்பு கொண்டது என்று நினைத்து ஊடியது. அந்த ஊடல்தான் பெண்புறா சோலையில் மறைந்திருப்பதற்குக் காரணம். இவ்வளவு தகராறுகளுகக்கும் காரணம் கம்பன் காவியப்புறா ஓவியப் புறாவினிடத்தில் சென்று விட்டதுதான்.

'தாவில் பொன் தலத்தின்
நல்
தவத்தினோர்கள் தங்கு
தாள் பூவுயிர்த்த கற்பகம்
பொதும்பர்புக் கொதுங்
குயில் ஆவியொத் சேவல்கூவ
அன்பின் வந்து அணைந்
திடாது ஓவியப் புறாவின்
மாடிருக்க
ஊடு பேடையே'

(நகரப்படலம், 22)

பறவைகளின் ஊடற்காட்சிகளைப் படம்பிடிப்பதிலே தான் கம்பனுக்கு எத்தனை ஈடுபாடு.

பிடவ மரத்தின் மலர்கள் விழுந்து கிடக்கின்றன. அம்மலர்ப்படுக்கையிலே ஒரு ஆண்மயில் நன்றாக உறங்கி விட்டது. அங்கே உறங்குவது தனக்குப் பெரிய ஆபத்தைத் தரும் என்று உணராத அசட்டு மயில் அது. அப்படி என்ன ஆபத்து அதற்கு வந்து விட்டது என்றா கேட்கிறீர்கள். தூங்கிய மயில் தூக்கத்திலிருந்து எழுந்து தன் பெண் மயிலைத் தழுவச் சென்றத்தாம். அவ்வளவு எளிதாகச் சம்மதித்து விடுமா பெண் மயில். சோதனை போடத் தொடங்கி விட்டது வந்ததய்யா ஆபத்து; பிடவ மலர்ப் படுக்கையிலே உறங்கியதல்லவா? அந்த மலர் வாசனை ஆண்மயிலின் தோகையிலே வீசியது. வந்ததே கோபம் பெண்மயிலுக்கு. வேறு பெண் மயிலோடு விளையாடி விட்டு அந்த ஆண்மயில் வந்துள்ளது என்று நினைத்து ஊடிக் கொண்டு விட்டதாம் பெண் மயில். என்ன வேடிக்கையான காட்சி. இந்த ஓவியத்தைப் பார்க்க ஆரணிய காண்டம் வனம்புகு படலத்துக்குச் செல்ல வேண்டும்.

பம்பை வாலிப்படலத்துட் கம்பன் காட்டும் எழிலோவியங்கள் பல;

பொய்கைகளில் எல்லாம் பவளக் கொம்புகளில் அரச அன்னமும் அதன் பெடையும் வானத்தில் விண்மீன்களோடு முழுமதிகள் பல உதித்தது போல அமர்ந்திருக்கின்றன என்பான்

தன் பேடையைப் பிரிந்த ஆண் அன்னமானது வானவர் மகளிரின் கால்சிலம்பொலியைத் தன் பெண்அன்னத்தின் குரலோ என்று செவியினால் கவனித்துக் கேட்கின்றது என்பான்

பம்பை ஆற்றின் கரையில் மாமரத்தின் கிளையிவ் உட்கார்ந்து கொண்டுதம்முடைய சிறகுகளை நீரறப் புலர்த்துகின்ற கொக்குகளைக் காட்டுகிறான்.

ஒரே காட்சியை இரண்டிடங்களில் வெவ்வேறாகப் படம்பிடித்து இரண்டையும் சரி என்று ஏற்றுக்கொள்ளும்படி செய்வதிலே கம்பனுக்கு நிகர் அவனே என்னலாம்.

பம்பை ஆற்றின் கரையில் பல்வேறு பறவைகள் இடைவிடாமல் ஒரே நேரத்தில் ஒன்றாகச் சேர்ந்து கூவுகின்ற காட்சி ஆரியம் முதலிய பதினெண் மொழிகளைப் பேசுகிறவர்கள் ஒன்றாக ஓரிடத்தில் பேசுவது போல உள்ளது என்று கூறுகின்றான் கவிஞன்.

குளத்திலும் மரத்திலும் உள்ள பறவைகள் எல்லாம் சிறகுகளை அடித்துக்கொண்டு மேலே எழுப்பிப் பெண்கள் சிலம்பொலி போல ஒலிக்கின்றன. மிகக் கொடுமைக்காரியாகிய கைகேயியை வெளிப்படவையமாட்டாமல் உள்ளே கொதித்து மனத்தில் வைவன போல உள்ளன என்று கைகேசி சூழ்வினைப் படலத்தில் காட்டுகின்றான். வெளிப்பட வைவதற்குப் பயப்படுபவர்கள் மனத்தில் வைவார்கள். வாயால் சத்தம் மட்டும் போடுவார்கள். பறவைகளின் குரல் ஒலி எழுத்தொலிக்கு ஒத்து வாராமையால் இங்ஙனம் கற்பனை செய்தான்.

ஆடும் மயிலையும் ஆடி அடங்கிய மயிலையும் வைத்து அற்புதக் காட்சிகள் படைக்கின்றான். இராமன் கிஷ்கிந்தையில் சுக்ரீவனுக்கு அரசு கொடுத்து ஆளச் செய்கின்றான். கார்காலம் வருகிறது. மழையைக் கண்டவுடன் மயில்கள் ஆடுமல்லவா· சீதையை தேடி வருந்துகின்ற இராமனுக்கு உதவி செய்வது போல உள்ளது இந்த ஆட்டம். காடு முழுவதும் கண் பரப்பித்(தோகையில் உள்ள கண்)தேடிக் கூவுவது போல தோகையை விரித்து ஆடுகின்றன மயில்கள் என்பது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

"கானம் யாவையும் பரப்
பிய
கண் எனச் சனகன்
மானைக் கூவிநின்றுஅழைப்
பன
போன்றன மஞ்ஞை"

(கார்காலப் படலம் 43)

கார்காலம் கழிந்தது. மழை நின்றவுடன் மயில்களின் கொண்டாட்டமும் போயிற்று. தோகை அடங்கி ஒடுங்கி இருந்தவிடம் தெரியாமல் உள்ளன மயில்கள் சானகி அச்சத்தால் அடங்கி ஒடுங்கி இருத்தல் போல என்பான். மயிலின் ஆட்டத்தில் இராமனையும், அதன் ஒடுக்கத்தில் சீதையையும் காட்டி காவிய நாயகனையும் நாயகியையுமே நம் கண் முன்னே கொண்டு வந்து விடுகின்ற அழகு மறக்க முடியுமா?


இனி இந்தக் காவிய நாயகன், நாயகியை எங்கே கண்டான்? மிதிலையில் உப்பரிகையில் இருந்த பிராட்டி "களிபேடோடு அன்னம் ஆடும் முன்துறை கண்டு" அங்கு அயல் நின்ற பொழுது முனிவனோடு வீதி வழியே சென்ற

இராகவன் சீதையைக் கண்டான். என்று தொடங்குகிற போதே இந்தக் காதலுக்குப் பறவைகளின் எழிலோவியத்தை நிலைக்களமாக்கிக் கொள்ளுவான் கம்பன். இந்த முதற்காட்கியைத் தொடர்ந்து பல படங்கள் எடுப்பான்.

கங்கைப் படலத்தில் பிராட்டியோடு செல்கின்ற இராகவன் களி அன்னமும் மட அன்னமும் நடம் ஆடுவ காண்பான். பிராட்டிக்குக் காட்டுவான். அம்மட்டோ... அன்னப் பறவைகளுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பை அகத்தியன் ஞானக் கண்ணால் அறிந்தான் போலும். பஞ்சவடியின் சிறப்பைச் சொல்ல வந்தவன் எல்லாம் சொல்லி முடிவிலே.

'கன்னி இளவாழை
கனி ஈவ கதிர் வாலின்
செந்நெல் உள தேன் ஒழுகு
போதும் உள தெய்வப்
பொன்னி எனல் ஆய
புனல் ஆறும் உள போதா
அன்னம் உள பொன்
இவளோடு அன்பின் விளை
யாட'

12ம் பக்கம் பார்க்க



## மகாகவி பாரதியார்

அந்நியர் ஆட்சியினால் அடிமை இருளிலும், ஆங்கில மோகத்திலும், அறியாமையிலும் இருந்ததமிழகத்தைப் பள்ளி எழுச்சி பாடித் துயிலெழுப்பியவர் பாரதியார். தமிழ் நெறியும்சுதந்திர உணர்ச்சியும், பொங்கித் ததும்பும் உயிர்க் கவிதைகள் மூலம் அவர் தமிழர் உள்ளத்திற் சாகா வரம் பெற்று வாழ்கிறார். அவர் ஒரு தேசியக்கவி அமரகவி தமிழன்னையின் தவப்பேறு.

இளமையிலே தமிழின் மீது கொண்ட ஆர்வத்தினால் சுப்பிரமணியம் என்று பெயரிட்டனர். சரஸ்வதி மீது கொண்ட ஈடுபாட்டினால் பாரதி என்றபெயரையும் சூடிக் கொண்டார். சேற்றின் மத்தியிலே செந்தாமரை மலர்ந்தது போல் பாரத பூமியிலே எட்டயபுரத்தில் வாழும் வறுமையின் மடியிலே பாரதியார் பிறந்தார். அவர் 5 வயதில் கொஞ்சும் குழந்தைப் பருவத்தில் ஆருயிர் அன்னையை இழந்தார். அருமைத் தந்தையின் அரவணைப்பிலே வளர்ந்தார். அறிவு கனிந்த தந்தையார் மூலம் அரிய தமிழ் நூல்களைப் பயின்றார். ஆங்கிலப் பாடசாலை ஒன்றிற் கல்வி கற்கும்படி அனுப்பப்பட்டார். உயர்தரக் கல்வியும் பயின்றார், ஆங்கிலம்,இந்தி,வடமொழிகளிலும் தேர்ச்சியடைந்தார். எனினும் பள்ளிப் படிப்பும் பாரதியாருக்கு வேப்பங்காய் போல் இருந்தது.

துள்ளித் திரியும் பருவம் அல்லவா? பாடசாலைக்கும் போகாது இயற்கையின் எழிற் காட்சிகளைக் கண்டு இன்புறுவதற்காக வண்ணச் சோலைகளிலே, வாவிக் கரைகளிலே மகிழ்ந்தார்.

மதுரக்கனி, இளந்தென்றல், அந்திவானம், குருவிகள், அருவிகள் யாவும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. உறங்கிக் கிடந்த அவரது கவிதா சக்தியைத் தட்டியெழுப்பி உயிரூட்டின.

பாரதி ஒரு புரட்சிக் கவிஞர். இவர் பழமையை வெறுத்தார். மக்களிடையே நிலவிய மூடநம்பிக்கைகளை அடியோடு விரட்டினார். இவர் கவிதைத் துறைகளில் பல புதுமைகளைச் செய்தார். இவர் சிறுவர்களுக்கெனப் 'பாப்பா பாட்டு' பாடினார். இதைவிடக் கண்ணன் பாட்டு, பராசக்திப் பாடல், பாஞ்சாலிசபதம், குயிற்பாட்டுப் போன்ற பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல ஒரு சுதந்திரவாதியும் கூட. தமிழ் மொழியைத் தன் தாயெனக் கருதினார். நாட்டையும், மொழியையும் இரு கண்களாக மதித்தார். இவர் இந்திய நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய தொண்டுகள் எண்ணில் அடங்காதவை ஆகும்.

சி. நிரஞ்சனி

# பூஞ்சிட்டு

## சோம்பல் இன்றிக் கற்றிடுவோம்

கொதித்து ஆறிய நீரினையே
குடிப்போம் என்றும் உணவினையும்
பசித்த போதே உண்டிடுவோம்
பார்ப்போம் சுத்தம் சுகாதாரம்
குளித்துத் தூய்மை பெற்றிடுவோம்
தோய்த்த உடையே நாம் உடுப்போம்
மனத்தில் தெய்வம் தனை இருத்தி
வணங்கி என்றும் மகிழ்ந்திடுவோம்
சோம்பல் இன்றிக் கற்றிடுவோம்
சுறு சுறுப்பாக வாழ்ந்திடுவோம்
மேன்மை மிக்க பெரியவரை
மதித்தே என்றும் பணிந்திடுவோம்.

தி. சுந்தரம்

## பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 476 குணரத்தினம் ஜசீத்த வயது. 11 மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை

இலக்கம் 477 அருளானந்தம் சுயீத்தா வயது 11 J.M.G. H. S.பருத்தித்துறை

இலக்கம் 478 முஹம்மது லுகுமான் ஜிஸ்தி வயது 12 ஒஸ்மானியா கல்லூரி யாழ்ப்பாணம்.

இலக்கம் 479 கருப்பசாமி செல்வகுமார் வயது 12 இளையதம்பி வித்தியாலயம் யாழ்ப்பாணம்

இலக்கம் 480 அ. தங்கமணி வயது 10 சைவப் பாடசாலை

## முரசொலி பூந்தோட்டம்

### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:-.......................................

வயது:-.......................................

பாடசாலையின்

பெயர்:-.......................................

கல்வி கற்கும் வகுப்பு:-...........................

வீட்டு முகவரி:-...........................

கையொப்பம்:-...........................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ..............................

திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதின்நான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

## ஆத்திசூடிக்கு சேர் பொன்.இராமநாதன் உரை

**ஐயமிட்டுண்**
பிச்சையை இரப்பவர்களுக்குக் கொடுத்து நீயும் உண்

**ஒப்புர வொழுகு**
உலகநடை அறிந்து நீ அந்த வழியிலே நட

**ஓதுவதொழியேல்**
அறிவு நூல்களை வாசிப்பதை நீ மரண பரியந்தம் விடாதே

**ஔவியம் பேசேல்**
பொறாமை வார்த்தைகளை நீ பேசாதே

**அஃகஞ் சுருக்கேல்**
தானியத்தை அதிக இலாபத்துக்காகக் குறையாதே

**கண்டொன்று சொல்லேல்**
ஒன்றைக்கண்டு வேறொன்றை நீ சாட்சியாகும் போது சொல்லாதே; கண்டதைக் கண்டபடியே சொல் என்பது கருத்து

**ஙப்போல் வளை**
நகரம்தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்போல நீ பிரயோசனமுள்ளவனாயிருந்து உன் இனத்தைத் தழுவு

**சனிநீராடு**
சனிக்கிழமை தோறும் எண்ணெய் இட்டுக் கொண்டு நீரிலே தலை முழுகு. புதன் கிழமையும் முழுகலாம்

**ஞயம்படவுரை**
பேசுஞ் சொல்லிலே இன்பம் விளையும்படி நீ பேசு

**இடம்படவீடெடேல்**
இடமானது அளவுக்கு மேற்பட்டு வெறுமையாய்க் கிடக்கும்படி வீட்டை நீ பெரிதாகக் கட்டாதே
(சித்தவைத்திய மூதறிஞர் ஐயம்பிள்ளை பேரம்பலம் நூலில் இருந்து)

## நங்கூரத்தின் ஆரம்பம்

கப்பல்களைக் கடலில் ஒரு இடத்தில் நிலையாக நிற்கச்செய்வது நங்கூரம். இரும்பிலான இந்த ஆங்கர்கள் உருவாக்கப்படுமுன் கப்பல்களைக் கடலில் நிறுத்த என்ன பண்ணினார்கள்? பெரும் பாறைக் கற்களை கயிற்றில் கட்டிக் கடல் நீரில் போடுவார்கள் பாறைக்கல் கடலுக்கடியில் போய் அமர்ந்து கொள்ளும். கப்பலை அசைய விடாமல் இழுத்துப் பிடித்துக் கொள்ளும். பாறைக்கற்களுக்குப் பதில் உறுதியான மரத்தினால் திமிங்கில வால் போன்ற (ப்ளுக்ஸ்) அமைப்பைப் பயன்படுத்தினார்கள். ஊன்றி நிற்கும் இரு கால்கள் போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்ட நங்கூரங்களும் பயன்படுத்தப்பட்டன. கடலடியின் தரையை வலுவாகப் பிடித்துக் கொள்ள விதவிதமான நங்கூரங்கள் உருவாக்கப்பட்டன. கடலடியைத் தொட்டதும் வெடித்து தரையில் ஆழமாகப் பதியும்படியான வெடிமருந்து சாதனத்துடன் கூட நங்கூரங்கள் உருவாக்கப்பட்டன.


## அதிசய பறவை

கஸ்ஸாபாவாரி பெரிய ஒரு பறவை ஆறடி உயரம் 180.பவுண்டுஎடையுள்ளது இப் பறவையினால் பறக்க முடியாது. அப்படி பறக்க வேண்டிய அவசியமும்அதற்கில்லை.ஏனெனில், போரிடுவதற்குஎந்த விதமான எதிரியும்இல்லை கஸ்ஸாவரிபறவைக்கு போதுமான ஆயுதங்கள் இயற்கையிலேயே அமைந்துள்ளன தலையில் பெரியமண்டையோடும், வலிமை மிக்க கால்களில் குத்துக்கத்தியைப் போன்ற நடு விரல் நகமும் இதற்கு உண்டு.

மூன்றுவகை கஸ்ஸாவரிகளுமே தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பெரிய தீவான நியூகினியா தீவில் வாழ்கின்றன. இவை அத்தீவில் காணப்படும் அடர்த்தியான காட்டுப் பகுதியில் வாழ்கின்றன. இவைகளை அநேகமாகக் கண்ணால் காணமுடிவதில்லை. ஆனாலும் இவை புதர்களினூடே உரக்கக் கூவிக் கொண்டும் ஓடுவதை அடிக்கடி கேட்க முடியும். இப்பறவை தன்னுடைய வலிமையானகால்தனின் உதவியினால் ஒரு பந்தைய வீரனைப் போல் வெகு வேகமாக ஓடக் கூடியது. கஸ்ஸாவரிக்கு எலும்பாலான கொம்பை போன்ற மண்டையோடு உண்டு. இதைக் கொண்டு புதர்களை விலக்கிக் கொண்டு ஓடும்.இது மரங்கள் மற்றும் இதர பொருட்களின் மீது மோதுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது.

K.N மணிவண்ணன்
வேலணை

# சிறுகதைத் துறையில் சாந்தனின் தனித்துவம்



வி.என்.எஸ்.உதயசந்திரன்

'பட்டங்கள் நிலையானவை!' — என்றார் முதலாம் ஆள். 'உண்மை; நாங்கள் செத்தாலும் எங்கள் பட்டங்கள் அழியாது போலத் தானிருக்கு!' — என்றார் மற்றவர்

'இப்ப பாரும் எப்பவோ ஒரு காலத்திலை எழுதினது உண்மைதான். இப்ப பத்துப் பதினைஞ்சு வருஷமா பேனையைக் கையாலை தொடேல்லை இன்னும் எழுத்தாளனெண்டு தான் சொல்றாங்கள்'

உதென்ன பெரிசு? நான் ஒரு காலத்திலை தொழிலாளியாயிருந்தவன் தான். இப்ப என்ர பட்டறையிலை எனக்குக் கீழை பத்துப் பேர் வேலை செய்யிறாங்கள் எண்டாலும் இன்னும் என்னைத் தொழிலாளி' எண்டு தான் சொல்றாங்கள்.

'இந்தக் கடுகுக் கதை 1975 ஆம் ஆண்டு கடுகு என்ற சாந்தனின் குறுங்கதைத் தொகுதியில் வெளிவந்த கதையாகும். திரு. ஐயாத்துரை சாந்தன் சிறுகதை எழுதுவதில் தான் தனது திறமைகளை வெளிப்படுத்தி வருபவர் அல்ல.

கடுகுக் கதைகளிலே சமூகப் பிரச்சனைகளைத் தெளிவாகப்படம்பிடித்துக் காட்டும் திறமை பெற்றவர். மேலே குறிப்பிட்ட கதையை வாசித்துப் பார்த்தால் எவ்வளவு அழகாகச் சொல்ல வந்த கருத்தைச் சொல்லியிருக்கின்றார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

1965 ஆம் ஆண்டு 'கலைச் செல்வியில்' நியதி என்ற கவிதை எழுதி எழுத்துலகத்திற்கு அறிமுகமானவர் திரு. சாந்தன்.

1966 இல் இவரது முதலாவது சிறுகதை கலைச் செல்வியில்வெளியாகியது. 'பார்வை' என்பதே இச் சிறுகதையின் தலைப்பு சமூகப் பண்பாட்டுப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு இக்கதை எழுதப்பட்டது.

கலைச் செல்வி மூலம் சிறுகதை எழுத்தாளனாக வெளிப்பட்ட திரு. சாந்தன் இதுவரை சுமார் நூறு சிறுகதைகளை எழுதியுள்ளார்.

கலைச்செல்வி, விவேகி, மல்லிகை, வீரகேசரி, தினகரன், கணையாழி (இந்தியா) ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

தேசிய இனப்பிரச்சனையை மையமாகக் கொண்டு 1972 இல் எழுதிய இவரது முதலாவது நாவல் 'ஒட்டுமா' என்ற தலைப்பில் 1976 ஆம் ஆண்டு தினகரனில் தொடராக வெளிவந்து 1978 ஆம் ஆண்டில் நூல் உருவில் வெளிவந்தது. இவர்எழுதியஈழமுரசு பத்திரிகையில் வெளியான ஆசைகள் என்ற குறுநாவலும் முரசொலியில் வெளிவந்த 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்' என்ற குறுநாவலும் ஈழத்து வாசகர்களிடையே மிகவும் புகழ் பெற்றவை என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

1965 இல் எழுத்துலகில் நுழைந்த திரு. சாந்தன் இன்றும் தொடர்ந்து எழுதி வருகின்றார். 1983 ற்குப் பின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலரைக் காணவில்லை. ஆனால் சாந்தன் இன்றும்

> "இவ்வளவு குறுகியவடிவத்தில் இவ்வளவு மகத்தான செய்திகளைத் தந்து விடவும் முடியுமா என்று வியக்கத்தக்க வகையில் சாந்தன் வெற்றியடைந்திருக்கிறார். புனைகதையில் இது ஓர் விசேஷ சாதனை"
>
> -அசோக மித்திரன்

எழுத்துலகில் நிலைத்து நிற்கின்றார்.

1983 இற்குப் பின்தான் அவரது எழுத்துக்கள் உத்வேகமடைந்தன. இன்றும் அவர் எழுதிக் கொண்டிருப்பதைப் பாராட்டுகின்றோம்.

கடந்த 25 வருடங்களாக எழுத்துலகில் நிலைத்து நிற்கும் திரு சாந்தன்அவர்களைச் சந்தித்து எதற்காக எழுதுகின்றீர்கள்?என்ற வினாவைத் தொடுத்தோம்.

எதற்காக எழுதுகின்றேனென்று கேளாதீர்கள் எழுதுவது எனது இயற்கை.வேலை விளையாட்டு,சவால்,பராக்கு ......... இதன் அர்த்தம் 24 மணி நேரமும் எழுதிக் கொண்டிருக்கின்றேன் என்பதல்ல எழுதும்போதுதான் சொற்கள் எவ்வளவு பலவீனமானவை என்பது தெரிகிறது

எழுதுவதை எதற்காக வெளிவீடுகின்றேன் என்று வேண்டுமானால் கேளுங்கள்· எழுதியதில் ஏனையோருக்கும் சொல்ல ஏதும் சேதி இருப்பின் அப்போது தான் அதனை வெளியிடுகின்றேன். இரண்டாவதாக இன்னொன்றையும் நேர்மையாக ஒப்புக் கொள்ள வேண்டும். பேரையும் விரும்புகின்றேன்.

சாந்தன் அவர்களே உங்களிடம் எதை எப்படி எழுதுகின்றீர்கள் என்ற வினாவைத் தொடுக்க விரும்புகின்றேன்·

நான் உணர்ந்தவற்றை என் மனதுக்குச் சரி என்று பட்டவற்றை என்னால் முடிந்தளவு வடிவமாகச் சொல்லப் பார்க்கின்றேன். இதிலே இரண்டு விஷயங்களை அழுத்த வேண்டும். என் மனதுக்குச் சரியென்று பட்டது ஒன்று முடிந்தளவு வடிவு என்பது மற்றது. இரண்டுமே, அந்தந்த சிருஷ்டி வேளைகளுக்காவது சத்தியமாக இருக்கவேண்டும்.

படைப்புக்கள் எப்படி இருக்க வேண்டும் எனநினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு இயல்பாக இருக்க வேண்டும், சுயமாக இருக்க வேண்டும் சுயம் என்னும்போது வாய்ப்பாடுகள், எதிர் பார்ப்புக்கள் எல்லாவற்றையும் கடந்ததாக இருக்கவேண்டும்.

புரியுமா? ஒப்புக் கொள்ளப் படுமா? நின்று நிலைகுமா? பேர் சொல்லுமா? என்பதெல்லாம் ஆக்கத்தை அழிக்கும் முயற்சிகளே சரியென்றால், அழகென்றால் ஒப்புக் கொள்ளப் பட்டால் நின்று நிலைத்தால், பேர் சொன்னால் சந்தோஷம். இல்லாவிட்டால் இல்லாததற்காக ஏன் கவலைப்பட வேண்டும்?

சாந்தன் அவர்களே எழுத்துக்காக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வா உங்களுடையது என்று கேட்டபோது அப்படியும் ஒன்று உண்டா? எழுத்துத்தான் எனக்கு வாழ்க்கையல்ல. அது என் இயல்பாகிப் போனாலும் வாழ்வின் அழகுகளில் பத்தோடு பதினொன்று அது. வாழ்வு எவ்வளவு பெரியது! அழகு! இத்தனைக்கும் பிறகும் இந்த மனித வாழ்நாளும் ஒரு நாளில் 24 மணித்தியாலமும் போதாதென்று அங்கலாய்க்கிற பேராசைக் காரன் நான்.

சிறுகதைகளை பலமுறை திருத்தி எழுதும் போது அது மேலும் மெருகூட்டப்படுகின்றது. என்று கூறும் கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

சிறுகதைகளைப்பலமுறை திருத்தி எழுதும் போது மேலும் மெருகூட்டப்படுகின்றது என்பது உண்மை தான். நான்பலமுறை திருத்தி எழுதுவேன். திருத்தி எழுதியபின் அக்கதையை அப்படியே வைத்திடுவேன், அக்கதை என் நினைவில் நின்று அகன்றபின் மீண்டும் அக்கதையை வாசிக்கும் போது புதிதாகக்கதையை வாசிக்கின்ற உணர்வு ஏற்படும். அப்போது கதையில் உள்ள தவறுகளை அறிந்து கொள்ள முடிவதோடு கதையையும் புது மெருகூட்ட முடிகின்றது.

பிரச்சினைகளைக் கூறும் சிறுகதைகள் எதை நோக்கிச் செல்ல வேண்டும் எனக் கருதுகின்றீர்கள் என்று கேட்டதற்கு அது தீர்வை நோக்கி திசை காட்டுவதாக அமைய வேண்டும்.

பத்திரிகைகள் எழுத்தாளர்களின் ஆக்கங்களைப் பிரசுரிக்கின்றபோது மாற்றங்களைச் செய்வதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? மாற்றம் செய்வதற்கு இருசாரருக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் எழுத்தாளனுடன் தொடர்பு கொண்டு அவருடைய அனுமதியோடு திருத்தம் செய்வதே சிறந்தது. ஒருவருடைய கருத்தில் மாற்றம் செய்வது ஆரோக்கியமானதல்ல.

ஈழத்திலும் இந்தியாவிலும் உங்களைக் கவர்ந்த எழுத்தாளர்களின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா? அவர்களின் எழுத்துக்களை விரும்புவதற்கான காரணம் என்ன? ஈழத்தில் என்னைக் கவர்ந்த எழுத்தாளர்களாக மகாகவியையும் அ. முத்துலிங்கம் அவர்களையும் குறிப்பிட்டுக் கூறலாம். அவர்களின் எழுத்தில் கலை அழகு இருக்கும் அவர்கள் யாழ் வாழ்க்கையை பிரதிபலித்த விதம் என்னை மெய் சிலிர்க்க வைத்துள்ளது.

இந்திய எழுத்தாளர்களில் அசோகமித்திரனைக் குறிப்பிட விரும்புகின்றேன். அவருடைய எழுத்தில் கலை நுணுக்கமும் நவீனத்துவமும் இருக்கும் அவர் எழுதிய சிறுகதைகளில்'ரிஷ்கா' என்ற சிறுகதை எனக்கு அதிகம் பிடித்தது இந்தக் கதையைப் போன்றதொரு அனுபவத்தை வைத்துக் கொண்டு முரசொலியில் நானும் அதே பெயரில் ('ரிஷ்கா') ஒரு சிறுகதை எழுதியுள்ளேன்.

உலக அளவில் ரஷ்ய எழுத்தாளரான அந்தோன் சேக்கப் அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இவரது கதைகள் சிறுகதைக்கு இலக்கணம் கூறி நிற்கின்றன.

விமர்சனங்கள் பற்றி..... என்ன நினைக்கின்றீர்கள்? என்று மாறுபட்ட ஒரு கேள்வியை நாம் கேட்டபோது விமர்சனங்கள் இதுவரை என்னை உற்சாகப்படுத்தியே வந்திருக்கின்றன. இயலாமைகள், வக்கரிப்புக்கள், இடம் நிரப்பும் அவதிகள் இவற்றின் விளைவாய் வருபவற்றை விமர்சனங்களென நான் ஏற்பதில்லை.

திரு.சாந்தன் அவர்களே பல எழுத்தாளர்களுடைய எழுத்துக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு என்று பரவலாகக் கூறப்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையே வேறுபாடு இருக்க முடியாது. அப்படி இருந்தால் அவனுடைய மனச்சாட்சிக்குத்தான் அது தெரியும். மற்றவர்கள் ஒப்புக் கொள்வதற்காக எப்படி எழுத முடியாதோ அப்படி மற்றவர்கள் ஒப்புக் கொள்வதற்காக நடந்து காட்டவும் முடியாது. அப்படிச்செய்தால் அது வேஷமாகிவிடும். அவனது மனச்சாட்சிதான் இதற்கு முடிவு சொல்லவேண்டும்.

தனிப்பட்ட ஒருவரைத் தாக்கக்கூடிய முறையில் எழுதுவது பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள், எந்தப் பிரச்சனையும் சமூக மட்டத்திலேயே நோக்கப்பட வேண்டும். என்பதையே விரும்புகிறேன்.

திரு.சாந்தன் அவர்களே உங்களுடைய பலவீனமாக எதனைக்கருதுகிறீர்கள் (மறைக்காமல் கூற வேண்டும்)

நாவல் புது வடிவத்தோடு வளர்ந்து செல்கிறது. சோதனைகள் நிறைந்தது என்னால் அதிகம் எழுதமுடியாது.அதாவது நீளமாக எழுதமுடியாது. இதனைத்தான் எனது பலவீனமாகக் கருதுகின்றேன் என்றார்.

ஒட்டுமா என்ற இவரது நாவல் பலரது பாராட்டைப் பெற்றதென்பதை நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தேசிய இனப்பிரச்சனையை மையமாக வைத்துத் தொடர்ந்து பிரக்ஞை பூர்வமாக எழுதி வந்தவர் திரு. சாந்தன் என்பதை எவரும் மறுக்க முடியாது.

1975 இல் திருகோணமலையில் சிங்களக்குடியேற்றப் பிரச்சனையைப் பற்றி ஒரு சஞ்சிகையில் எழுதியபோது வகுப்புவாதி என்ற முத்திரை குத்தப்பட்டவர் திரு. சாந்தன் அப்போது தேசிய ஒற்றுமையைப் பற்றிக் கதைப்பதே பஷனாக இருந்து வந்தது.

அச் சஞ்சிகையில் இவரது ஆக்கம் வெளியான போது கண்டனக் கணைகளும் எழுந்தன அப்போது அச் சஞ்சிகை ஆசிரியர் திரு.சாந்தனை இனங்காட்டவே ஆக்கத்தை வெளியிட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார். இது பற்றி சாந்தனிடம் கேட்டதற்கு பத்து வருடங்களின் பின் எனது கருத்துக்கள் சரி என நிருபிக்கப் பட்டன. தேசிய இனப் பிரச்சனையைச் சுட்டிக்காட்டிய இந்த முதலா

12ம் - பக்கம் பார்க்க



சாந்தனின் நூல்கள்

# மன்மதரா !

புஷ்பபாணத்துடனும் மகரக் கொடியுடனும் எங்கே புறப்பட்டு விட்டீர்கள் மன்தரே! உங்களுடைய மண்டலத்திற்கும் 'அப்பலோ'க்கள் வரத்தொடங்கி விட்டனவா உமக்கென்று தான் எந்த மண்ணும் கிடையாதே!

'பூலோ வாசிகளே பொல்லாதவர்கள் ஒளிந்து மறைந்து நான் பூலோகத்திற்கு வந்திருப்பதை எப்படி ஐயாமோப்பம் பிடித்தீர்?'

சிவபெருமானே எத்தனை எத்தனையோ வடிவங்களில் பூமிக்கு வந்து செய்த திருவிளையாட்டுகளையெல்லாம் புத்தகமாக எழுதிவைத்திருக்நாம் உம்மை அடையாளங் கண்டுகொள்வது என்ன பிரமாதம்? ஆமாம் நீர் உமது மனைவியாராகிய இரதிதேவியாருடன் தான் வந்திருக்கிறீரா? அல்லது தனியாளாா வந்திருக்கிறீரா?

'தனியாளாகத் தான் வந்திருக்கின்றேன். இரதி தேவியை அழைத்து வரச் சிறிது நாளாகும்!

என்ன மன்மதரே நீர் பேசுவதைப் பார்த்தால் நமது ஈழவள நாட்டில் சிறிது காலந்தங்கிவிடத் தீர்மானித்துக் கொண்டு வந்திருப்பவரைப் போலத் தெரிகிறது: உம்முடன் சிறிது நேரம் பேச ஆசைப்படுகின்றேன்: வாருங்கள் அந்த மரத்தடிக்குச் செல்வோம்!! 'நான் சந்திக்கும் முதல் பூலோக வாசி நீர்தான்: உம்மால் எனக்கொரு காரியம் ஆகவேண்டும்!'

'சொல்லுங்கள் சுவாமி!!

'நான் இரதி தேவியாருடன் தங்குவதற்கு நல்ல மலர்ச்சோலை ஒன்றை எனக்குக் காண்பிக்க வேண்டும்!!'

கவலையை விடுங்கள் மன்மதரே, நாளைக் கென்றாலும் இரதி தேவியாரை அழைத்துவாருங்கள்; நல்ல மலர்ச்சோலை யாகக் காண்பிப்பது எனது பொறுப்பு!!

நன்றி நீர் மிகவும் நல்லவர் போலத்தோன்றுகின்றது. உமக்கு நான் செய்யும் உபகாரமாக .........!'

'ஐயோ என்ன சுவாமி இது என் மீது புஷ்பபாணத்தை விட ஆயத்தஞ் செய்கிறீர்களே! ஏற்கனவே அரைடஜன் குழந்தை களோடு அல்லாடிக் கொண்டிருக்கின்றேன். உங்கள் நன்றியை வார்த்தைகளினால் புலப்படுத்தினால் போதும்புஷ்ப பாணத்தைஅப்படியேவையுங்கள்!


'என்ன ஐயா ஒரேயடியாகப் பயந்து நடுங்குகிறீர்?

'நடுங்காமல் என்னசுவாமி செய்வது? விலைவாசி யெல்லாம் எக்கச்சக்கமாக ஏறிவிட்டது, விலையை வாசித்துவிட்டு பேசாமல் திரும்ப வேண்டிய காலமிது! ஒரு நாளைக் கடத்துவது ஒருயுகத்தைக் கடத்துவது போல இருக்கிறது. ஆமாம்ஈழநாட்டிற்குத் தாங்கள் எதற்காக வந்தீர்கள்?'

'இங்கே எனக்கு வேலை இருக்கிறது; அதற்காக வந்தேன். நாமே வேலைகிடைக்காமல் வெளிநாட்டிற்குப் போக ஏஜென்சிக் காரர்களிடம் சுளையாகப் பணத்தைக் காதும் காதும் வைத்தாற் போல் அள்ளிக் கொடுத்துவிட்டு 'லபோ லபோ' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டிருக்கும் போது உங்களுக்கு யார் சுவாமி வேலை கொடுக்கப் போகிறார்கள்?'

## வருக !

'நீர் பூலோக வாசிதானா என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது: ஆண்களும் பெண்களும் தங்கள் விருப்பப் படியே பதினெட்டு வயது வந்ததும் விவாகஞ் செய்யலாம் என்றொரு சட்டம் வரப்போவதை நீர் அறியீரா?



'கேள்விப்பட்டிருக்கின்றேன் சுவாமி!'

நீர்கேள்விப்படுவதற்கு முன்னரே இச்செய்திநாரதர் மூலம் பிரம லோகத்திற்கு எட்டிவிட்டது! உடனடியாக ஈழத்திற்குச் செல்லுமாறு எனக்கு ஆணையுங் கிடைத்துவிட்டது;

'அப்போ மலர்ப்பாணம் போடுவதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்று கூறுங்கள்: நீங்கள் மிகவும் அவசரப் படுகிறீர்கள்! எதற்கும் நிதானம் வேண்டும் சுவாமி! தேவர்களது வேண்டுகோளுக்கிணங்கி சிவபிரான்மேல் புஷ்ப பாணங்களைச் செலுத்தினீர்கள் பலன்என்னவாயிற்று? அங்கம் இழந்து அநங்கன் என்ற பெயரைப் பெற்றீர்கள்.

இப்பொழுது விழுந்தடித்துக்கொண்டு இங்கே ஓடிவந்திருக்கிறீர்!

'இங்கேயும் எனக்கு ஆபத்து ஏதாவது ஏற்பட்டுவிடுமா?'

★ செ. நடராசா ★

'உம்மால் வருகிற ஆபத்தைச் சமாளிக்கப் பூலோக வாசிகள் தயாராய் இருக்கும் போது உமக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடாது! அது நிற்க உமது புஷ்ப பாணத்தினால் தாக்குண்டு இறந்தவர்கள் தொகை அதிகமாக இருக்கிறதே! இதன் காரணமாகவே ஆண்களும், பெண்களும் பதினெட்டு வயது வந்ததும் விவாகஞ் செய்யலாம் என்ற சட்டம் வரப்போவதாக அறிகிறேன். உமது விளக்கம் என்ன?

'நான் இதிலே விளக்குவதற்கு ஒன்றுமில்லை. எனது மலர்ப்பாணங்களைத்தான் நீர் அறிவீரே! வனசம், சூதம், அசோகம், முல்லை, நீலம் என்பன அவற்றின் பெயர், இவற்றின் அவஸ்தைகளுள் மரண அவஸ்தையும் ஒன்று!

'மன்மதரே எனக்குத் தலையைச் சுற்றுகிறது. ஒன்றுமே புரியவில்லை. தங்களது மலர்ப்பாணங்களால் வாலிபரும் வனிதையரும் ஏன் இறந்து போகவேண்டும்? அதனைச் சிறிது விளக்கமாகக் கூறுங்கள்!

'சிறிது கவனமாகக் கேளும்: அதாவது வெறும் மோக அலையிற் பட்டவர்கள் மரணத்தைத் தழுவத் தான் வேண்டும்!'

'மோகத்திற்கும் நீங்கள் தானே சுவாமி காரணம்?!

'உண்மைதான்! ஆனால் பூரணமான காதல் இப்பொழுது தோன்றுவது குறைவு; வெறும் மனக்கிளர்ச்சியினாலே கணப்பொழுதில் தோன்றிமறையும் உணர்ச்சிகளைக் காதல் என்று கூறலாமா? எனது மலர்ப்பாணங்களுக்கு உண்மையாக இலக்காகுபவர்களிடந்தான் மெய்க் காதல் தோன்றுகிறது.

'புரிந்து கொள்ளுகிறேன் மன்மதரே. நீங்கள் கூறுவதைப் பார்த்தால் காதல் தோன்றுவதற்குக் காலம், பொழுது உண்டென்று எண்ணத்தோன்றுகிறதே,'

'நீர் கூறுவது சரிதான்; காதல் தோன்றுவதற்கு வசந்தகாலம் நிலா; மணற்குன்று; பூஞ்சோலை; கடற்கரை, சந்திரோதய காலம் முதலியவற்றை முன்னோர்கள் உரிய பின்னணியாக வைத்திருக்கிறார்கள்!'

அப்படிக் கூறுங்கள் சுவாமி; வெறும் உணர்ச்சி வசப்பட்டு நடைபாதை ரியூட்டரி, ரயில் நிலையம், பஸ் நிலையம் முதலியவற்றில் காதல் புரியத் தொடங்கினால் சுவை நிலைத்து நிற்குமா? மரணத்தின் பிடியில் சிக்கித்தவிக்க வேண்டியதுதான்! 'உமக்கு நல்ல புத்தி சாலித்தனம் இருக்கிறது; மிக்க மகிழ்ச்சியடைகிறேன்!

'சுவாமி சுவாமி உங்களுக்கு மகிழ்ச்சி யேற்படுகிற தென்றால் எனக்குப்பகீரென்கிறது. மலர்ப்பாணங்களை என்மேல் தொடுத்துவிடாதீர்கள்,

## வருக !

'என்னிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறிந்து கொண்டீரா?'

'எதற்கு அவசரப்படுகிறீர்கள் ஆண்களும் பெண்களும் பதினெட்டு வயது வந்ததும் விவாகஞ் செய்து கொள்ளலாம் என்ற சட்டம் பரிசீலனையில் இருக்கும்போது நமது நாட்டுக்கு வந்துவிடத் துடியாய்த் துடிக்கிறீர்கள்.! ஏதாவது தப்பும் தவறுமாக மலர்ப்பாணங்களை ஏவி நமது ஆடவர்களையும் மங்கையர்களையும் சோதனைக் குள்ளாக்கி விடுவீர்களோ என்று அச்சமாக இருக்கிறது.

'நீர் கூறுவதிலும் உண்மையுண்டு. வீட்டிலே 'டெக்'

12ம் பக்கம் பார்க்க




### பலதிக்கும் 'பட்டிமண்டபம்' புளகிக்கும் சுவைஞர் கூட்டம்

பட்டிமண்டபத்துக்கு மக்கள் மன்றில் இன்று நல்ல வரவேற்பு. திரள் திரளாகக் கூடுகிறார்கள்; சுவைக்கிறார்கள்; சிந்திக்கிறார்கள் உண்மை. இது செய்திகள் கூற. அறிவையூட்ட, மகிழ்விக்க, ஆற்றுப்படுத்த நல்ல ஒரு ஊடகமாக அமைகிறது. இதனாற்,போலும் இலங்கை கம்பன் கழகம் இத்துறையிலும் கொடிகட்டிப் பறக்கிறது.

### நான்கு மாதங்களில் இருபத்துநான்கு பட்டி மண்டபங்கள்

தைபிறந்தது; கம்பன் கழகப் பட்டி மண்டபத்துக்கும் மவுசு பிறந்தது. வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் புத்தாண்டு முதலாவது பட்டி மண்டபம் இந்து கலாசார அமைச்சர் தேவராஜ், மற்றும் கலை இலக்கியப் பிரமுகர்கள், கல்விமான்கள் சங்கமித்த சபையில் அற்புதமாய் அமைந்துவிட்டது. வானொலி அறிவிப்பாளர் ஹமீத்'பல காலங்களுக்குப் பின் நிகழும் அற்புத நிகழ்ச்சியென' புகழாரம் சூட்டினார்.

கொழும்பு வந்து பட்டி மண்டப நடுவராக அமர்ந்து இலக்கிய நயம் சொட்டச் சொட்டத்தர்க்க ரீதியாகத் தீர்ப்பு வழங்கிய இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் ஜெயராஜைக் ஹமீத் மெச்சினார். தொடர்ந்து நிகழ்ந்த பட்டிமண்டபங்கள் கிளிநொச்சி, காரைநகர் யாழ்ப்பாணம், சுன்னாகம், தெல்லிப்பழை, கைதடி, புங்குடுதீவு, வேலணை, உட்படப் பல வேறு இடங்களில் நிகழ்ந்த வேளை சுவைஞர்கள் நற்பயனடைந்தனர் கவிஞர் சோ.பத்மநாதன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், கனக.நாகேஸ்வரன், கவிஞர் கல்வயல் குமாரசுவாமி, திரு நந்தகுமார், சிவகுமாரன் ரகுபரன் உட்படப் பல வல்லுநர்கள் வாதாடும் பாங்கு தனித்துவமானது. மாலைவேளையா? முன்னிரவா? நடுச்சாமமா? பின்னிரவா? சபையினர் ஆடாது அசையாது தோய்ந்து ரசிக்கிறார்கள்.

### கண்டனங்கள்; காத்திரமான அறுவடைகள்

இயற்றமிழ்த் துறையில் மக்கள் ஈடுபாட்டை இரசனையை சிந்தனையை உந்தி நிற்கும் இந்த நிகழ்வையும் பங்கு கொள்வோரையும் கண்டிப்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். 'சின்னமேளம் பெரிய மேளம்' என்ற குரலும் ஒலிக்கிறது. கண்டனங்கள் வரவேண்டும்.

அபிப்பிராய பேதம், அலசல் என்டன ஆரோக்கியமான அம்சங்களே. இருப்பினும் பட்டிமண்டபம் மூலம்காத்திரமான பயனை அவையினர் பெறுகின்றனர்.

மரபு இலக்கியங்கள் புராணங்கள் என்பவற்றில் பொதிந்துள்ள அரிய அம்சங்களை வாதாட்ட மூலம் முன்வைக்கப்படும் போது அவையினர் ஈடுபாட்டுடன் சுவைக்கிறார்கள். பேசப்படும் பொருள்பற்றி அல்லது பாத்திரங்கள் பற்றி தர்க்கரீதியாக தாமும் சிந்திப்பதுடன் விடயங்களையும் இலகுவாகப் புரிகின்றனர்.

பாடசாலைகளிலேயே பழைய இலக்கியங்களை புராணங்களை அறியமுடியாத மாணவர்கள் பட்டி மண்டப மூலம் காத்திரமான அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள். ஏதோ சுவை இருப்பதால் நற்பயன் இருப்பதால் தானே இளம் சந்ததிஈடுபாட்டுடன் மொய்க்கிறது தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பட்டி மண்டபத்தை நயந்த இளைஞர்கள் ஆற்றுப்படுத்தும் பெரியோர்கள் மாதா மாதம் பட்டிமண்டபம் நடத்தப்பட்டால் மாணவஉலகு நயமடையும்என்று பேசிக் கொள்கிறார்கள்.

பாரதி போன்ற புதுமைக் கவிஞர்களின் சிந்தனையாளாகளின் கருத்துக்களையும் பட்டி மண்டபத்தில் அலசுவதால்புதுமை இலக்கியச் சிறப்பம்சங்களையும் சுவைஞர்கள் நயந்து நயந்து உட்கொள்கிறார்கள்.

இலக்கிய ஈடுபாட்டை, தர்க்கமாடும் முறையை, பேச்சுக்கலையின் நுட்ப திட்பங்களை,ஆய்வு நோக்கில் ஒரு அருட்டுணர்வை இளம் உள்ளங்களில் பாய்ச்சி நிற்பது பட்டிமண்டபம். தனிப்பேச்சைவிட இதற்குப் பல மடங்கு சக்தி உண்டெனலாம்.

நம் முந்தையோர் கைக்கொண்ட அரிய நற்பண்புகளை, கம்பன், இளங்கோ, சேக்கிழார் பாரதி போன்றோர்சுட்டும் நல் நெறிகளை பேச்சோடு பேச்சாக வருங்கால சிற்பிகள் உள்ளத்தில் பதித்திட பட்டி மண்டபம் துணைநிற்கிறது.

சமூக நவீனம்



# மாறும் சொந்தங்கள்

கே. எஸ். ஆனந்தன்

## அத்தியாயம் ஐந்து

மனிதன் எத்தனையோ மனக் கோட்டைகளைக் கட்டுகின்றான். அத்தனையும் நிறைவேறுகின்றதா? ஒன்றை ஆரம்பித்து வைப்பதும் — முடித்து வைப்பதும் எமக்கு மேலேயுள்ள ஒருவனல்லவா? நாம் அவன் ஆளுமைக்குட்பட்ட கருவிகளல்லவா? இதனை நன்குணர்ந்தவர்கள் கூட உண்மையை மறந்து செயல் படுகின்றார்களே! செயற்பாடுகளில் சிக்கல்கள் நேரும் போதுதான் எமக்கும் மேலே ஒருவனடா என்று அங்கலாய்க்கின்றார்கள். இவர்களில் ஒருத்தி தானே சுகன்யாவும்.

பெரும்பாலான பெண்கள் சுயநல வாதி களாகவேயிருக்கின்றார்கள். தன்நலமில்லாதவர்கள் யாருமேயில்லையானாலும் தன்நலமே பெரிது என நினைக்கும் பலரில் சுகன்யா ஒருத்தியாக இருந்தாள். அவளுடைய நினைவுகளுக்கு எதிர்மாறான கருத்துக்களுடன் அங்கே வந்த அத்தை மீனாட்சியுடன் மீண்டும் கதைக்கப் பிரியப்படாதவளாக ரோட்டுக் கரையில் வந்து நின்று கொண்டு சேகர் நிற்கின்றானா என ஆராய்ந்தாள். அவன் அங்கே தென்படவில்லை. திரும்பவும் வீட்டிற்குள் சென்று ஓர் புத்தகத்தை எடுத்து படிக்க ஆரம்பித்தாள்.

வயித்திலிங்கத்துடன் கூடப் பிறந்த சகோதரி மீனாட்சி. தாவடியைச் சேர்ந்த சரவணமுத்து ஆசிரியரை திருமணம் செய்திருந்தாள். அவர்களுக்கு இரண்டு மகன்கள். மூத்த பையன் நாட்டு விடுதலைக்காகப் போராடிய ஓர் இயக்கத்தில் சேர்ந்து வீரமரணமடைந்ததால் இரண்டாவது மகனை மிகச் செல்லமாக வைத்திருந்தனர். அவர்களுடைய திரண்ட ஆஸ்திக்கு அவனே வாரிசு. வயித்திலிங்கம் ரம்யாவுக்கு அவனை முதலில் கேட்டதும் அவர்கள் விரும்பினாலும் மகன் ஏதோ சாட்டுக் கூறி மழுப்பி விட்டான். வயித்திலிங்கம் அதை மனதில் வைத்துக் கொண்டே தங்கையிடம் 'மகன் என்ன கல்யாணம் முடிக்க மாட்டானாமோ? என்று கேட்டார்.

'இப்ப என்னண்ணை இன்னொருத்தி இருக்கிறாள் தானே பார்ப்பம்' என்றாள் மீனாட்சி.

'மீனாட்சி நாடு பெரிய தேசமிருக்கு ஒருத்திக்கு ஒருத்தன் எங்கோ பிறந்திருப்பான் தானே. நரன் ஏன் கேட்டனான் என்றால் எங்கள் உறவு விட்டுப்போகக் கூடாது பார்' 'சின்னவள் இருக்கிறாள் தானே. முடிச்சிட்டால் போகுது. எனக்கு மட்டும் என்னண்ணை விருப்பமில்லையென்று நினைச்சீங்களே. அவன் .. ..' என்று கூறி இரகசியமாக என்னவோ கூறினாள் மீனாட்சி.

'அப்படியா விடயம்? என்று கூறிச் சிரித்தார் வயித்திலிங்கம். மீனாட்சி என்ன கூறினாள் என்ற விடயம் பாக்கியத்துக்கு கேட்க வில்லையானாலும் ரம்யாவுக்கு ஓரளவிற்கு புரிந்தது. மாமியும், மகனும் சுகன்யாவுக்கு வலை விரித்துள்ளனர் என்பதையறிந்ததும் ஒரு புறம் மகிழ்சியாயிருந்தாலும் தன்னை மருமகளாக ஏற்க ஏன் அவர்கள் தயாராயில்லை என்ற கேள்வி மனதை அரிக்கத்தாள் செய்தது.

மீனாட்சி விடை பெற்றுப் புறப்படும் பொழுது கூட சுகன்யா வெளியேவர வில்லை மீனாட்சி விசாரித்த பொழுது இழுத்துவராத குறையாக வெளியே கூட்டி வந்தாள் ரம்யா.

'வாறன் பிள்ளை' என்றாள் மீனாட்சி.

பதில் ஏதும் கூறாமல் சிரித்து மழுப்பி விடையளித்தாள் சுகன்யா.

'ஏன்டி வாய்க்குள் என்ன கொழுக்கட்டையா பேசாமல் நிற்கிறியே' என்று முணுமுணுத்தாள் அக்கா ரம்யா.

'அக்கா எல்லோரும் நாடகம் நடத்துகினம். எனக்கு இதில் பாத்திரம் ஏற்க விருப்பம் இல்லை. உன்னை ஏற்காத இடத்தில் என்னைமட்டும்... '

'உனக்கு விருப்பமில்லையோ என்னவோ வீட்டுக்கு வந்தவர்களிடம் மரியாதையுடன் பழகவேண்டாம் என்ன இருந்தாலும் அவ எங்கள் சொந்த அத்தையில்லையா?'

'சொந்தமும் பந்தமும் எல்லாம் வெறும் வேஷம்.கொஞ்சம் என்றாலும் நாங்கள் வசதியாயிருப்பதால் தான் இதுவும், இல்லை என்றால் நீங்கள் யார் என்று கேட்பினம். நான் மௌனமாயிருக்கக் காரணமே ஓரளவுக்கு மரியாதை தான். இப்படியே எல்லாத்துக்கும் மௌனம் சாதிப்பேன் என்றோ அல்லது உன்னைப்போல ஊமையாயிருப்பேன் என்றோ நினைத்து விடாதே' என்றாள்.

பொம்பிளைப் பிள்ளை இப்படி எல்லாம் கதைத்துப் பழகாதை. வீட்டிலை நீ இப்படிக் கதைக்கும் பழக்கம் போற இடத்திலும் வரும்.' என்று கூறிவிட்டுச் சென்றாள் பாக்கியம்.

'அம்மா உங்களைப்போல இருப்பன் என்று மட்டும் நினையாதையுங்கோ. வாழ்ந்தால் சந்தோஷமாக வாழணும். இன்றேல் ...... என்று கூறிச் சிரித்தாள்.

'அப்பு வாறார் பேசாமல் இரு' என்று மெல்லக் கூறி கண்சாடை காட்டினாள் ரம்யா.

மௌனமே உருவாக அமர்ந்திருந்தாள் ரம்யா. அவள் அதிகம் பேசுவதில் கூட அர்த்தமில்லாதிருக்கலாம். ஆனால் அவள் மௌனம் பல்வேறு சிந்தனைகளை ரம்யாவின் மனதில் தோற்றுவித்தது. அவளைச் சீண்டி வேடிக்கை பார்க்க நினைத்தாளாயினும் சந்தர்ப்பம் சரியில்லாதிருக்கவே அவளும் பேசாமல் சென்று விட்டாள்.

சுகன்யாவின் மனதில் ராஜசேகர் எங்கே சென்றிருப்பான் என்ற கேள்வியே வலம் வந்து கொண்டிருந்தது. மாலையில் வரும்படி கூறியிருந்தானாயினும் அவனில்லாமல் அங்கே சென்றால் அண்ணியின் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்லியாகணுமே என்ற நினைவில் மௌனமாகவேயிருந்தாளாயினும் மனக்குரங்கு தாவிக் கொண்டேயிருந்தது.

அக்காவின் திருமணம் பற்றி இனி அவனுடன் கதைப்பதில் பிரயோசனம் இல்லை என்பது தெரிந்திருந்தும் செந்தில் மூட்டி விட்ட தீ, அக்காள் அதற்கு ஊற்றிய நெய் இரண்டும் சேர்ந்து அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு ஆவேசத் தீ கொழுந்து விட்டெரிந்தது.

எட்டாத கனி புளிக்கும் என்று நரி கூறியதாக ஓர் கதையுண்டல்லவா? அதே போல ராஜசேகர் தனக்குக் கிடைக்கமுடியாத ஒன்று என்று எண்ணிய பொழுது அவன் மீது வெறுப்பு ஏற்பட்டது என்னவோ மறைக்க முடியாத உண்மை. இப்போ ஒரு வழியில் அவன் சொந்தக்காரனாகவும் மாறிவிட்டான். அவனிடம் தன் மனதையும் பறிகொடுத்து விட்டு தடுமாறும் நெஞ்சுடன் தவிப்பதை விட்டு ஒரு முடிவுகாண வேண்டும் என்ற ஆவலே மேலோங்கிய நினைவில் உழன்று கொண்டிருந்தாள்.

கிணற்றடியில் வாளிச் சத்தம் கேட்டதும் தலைநிமிர்ந்து பார்த்தாள். ராஜசேகர் முகம் கழுவிக் கொண்டிருந்தான். உடனே வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள்.

'வாரேன் என்று கூறிவிட்டு மறந்திட்டீங்களா? நான் உம்மையே எதிர் பார்த்துக் கொண்டிருந்து தூங்கிப்போய் விட்டன் இப்பதான் எழுந்தேன்' என்று கூறிச் சிரித்தான்.

'எங்க மாமி வந்திருந்தா வெளியில் உங்களையும் காணலை. நீங்கள் எங்கேயாவது போய் விட்டீர்களோ என்று நினைத்தேன் '

'உம்மை வரும்படி கூறி விட்டு போய் விடுவேனா? வார்த்தை தவறமாட்டன்'

'மன்னிச்சிடுங்க இனி அது பற்றிக் கதைப்பதிலும் பிரயோசனம் இல்லை.'

'அக்கா கல்யாணம் பற்றித் தானே?'

'ம்'

'நல்லது மிஸ் சுகன்யா. நான் கூட மனதில் ஒரு நினைவுடனிருந்தேன். ஆனால் மாமா அவசரப் பட்டு விட்டார். இனி அது பற்றி கதைப்பதிலும் பிரயோசனம் இல்லை.'

'என்ன விடயம் என்னிடம் சொல்லக் கூடாதா?'

'சொல்வதால் ஒன்றும் கெட்டுப்போய் விடாது எனக்கு ஒரு அண்ணா வெளிநாட்டில் இருக்கின்றான். அவனுக்கு ரம்யாவை ......' என்று கூறிவிட்டு அவளைப் பார்த்தான்.

'நீங்கள் இது பற்றி முன்பே கதைத்திருக்கலாம் சார். உண்மையில் அக்காவுக்கு இந்த கல்யாணம் விருப்பமில்லை இது பற்றித்தான் உங்களோடு கதைக்க விரும்பினேன். விருப்பமோ— விருப்பமில்லையோ முற்றாகிப் போன விடயம் பற்றி இனி கதைப்பது... ......'

'உண்மைதான் நம்ம விருப்பப்படி எதுவும் நடப்பதில்லையே மிஸ் சுகன்யா.

'ஏன் சார் இந்த மிஸ்ஸை விட்டிட்டு சுகன்யா என்று கூப்பிட்டால் என்ன? நான் சின்னவள் தானே?'

'அப்படி அழைக்கலாம் நீர் சிறியவள் என்று நான் அழைக்கப்போய் ......'

'என் பெயரை மட்டும் சொல்லுங்கள் நீங்கள் மிஸ் சுகன்யா எனும் போது எனக்கு என்னவோ போல இருக்கு.'

சரி சுகன்யா இந்த விடயம் அக்காவுக்கு தெரிய வேண்டாம்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அவனிடம் எவ்வளவோ கேட்கணும், கதைக்கணும் என்று எண்ணிக் கொண்டிருந்தவள் எதுவும் கேட்காமல் நின்று விட்டாள். அவனைக் காணாத போது அவனைப் பற்றிப் பல்வேறு நினைவுகளில் மூழ்கித் தவித்தாள்.

அமுதமழை பொழியும் முழு நிலவு ஆகாயத்தில் பவனிவந்து கொண்டிருந்தது. பனியில் கலந்து மென்தென்றல் வீசிக் கொண்டிருந்தது. மொட்டவிழும் மலர்களிலிருந்து சுகந்தமணம் மனதிற்கு போதையூட்ட அழகு மயிலாக நடந்து கொண்டிருந்தாள் தர்சினி அவளுடைய சிவந்த அதரங்கள் மென்னகையின் பொலிவுடன் சினிமாப்பாடல் ஒன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தன. வானத்துத் தேவதை வையகத்திற்கு வந்து தனிமையில் நின்று தவிப்பது போன்றிருந்தது அவள் நிலை. அதே வேளையில் தான் தேனோடு கலந்த தெள்ளமுதாய் காற்றிலே மிதந்து வந்தது அந்தக் கீதம் அவள்விழிகளைக் கூர்மையாக்கி அந்த கானம் வந்த திசையை நோக்கினாள். அங்கே சரித்திர காலத்து அரசகுமாரனைப் போல் நின்றிருந்தான் ராஜசேகர்.

'சேகர்' அவளையறியாமலே வெளிவந்துவிட்டன வார்த்தைகள்.

'தர்சினி நீயா?' என்றவாறு அவளை நெருங்கி வந்தான் சேகர்.

'சேகர்'

'ம்'

'ஏன் பாட்டை நிறுத்தி விட்டீர்கள்?'

'உன்னைப் பார்த்ததும் என்னையறியாமல் பாடினேன். நீ அழைத்ததும் பாட்டை மறந்திட்டேன்.' என்று கூறிச் சிரித்தான் சேகர் அவனுடன் அவளும் சேர்ந்து சிரித்தாள்.

'தர்சினி நீ சிரிக்கும்போது உன் கன்னங்களில் தோன்றும் அழகிய குழிவுகள் உன் அழகுக்கு மேலும் அழகூட்டுகின்றன.'

'சேகர் சிறு வயதில் உங்களைப் பார்த்தது இப்போ பெரியவராய் பார்க்கும் போது நான் என்னையே மறந்திட்டன் எங்களை சந்திக்க வைத்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.' அவன் மார்பில் மயங்கிச் சாய்ந்தாள்.

'தர்சினி' என்று வாஞ்சையுடன்
அழைத்து அவள் முதுகை வருடினான்.

'சேகர்' தேன் பிலிற்றும் மலராய் மாறிவிட்ட அவளால் எதுவும் பேசமுடியவில்லை.

'தர்சினி தர்சினி' என்ற பெண்ணின் குரல் கேட்டுத் திடுக்குற்று விழித்தவள் எதிரே நிற்கும் அம்மா சரஸ்வதியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள்.

'என்ன தர்சினி பகல் கனவா?' என்று கேட்டுச் சிரித்தாள் தாய்.

'அம்மா அன்று ரெயினில் அத்தானைச் சந்தித்த நாள் தொடக்கம் அடிக்கடி கனவில் அவரைக் காண்கின்றேன். ஏன் அம்மா?' என்று குழந்தை போலக் கேட்கும் அந்தப் பருவப்பெண்ணை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தாள் சரசு.

'தர்சி அந்த நேரத்தில் அவங்களையெல்லாம் கைவிட்டது எவ்வளவு பெரிய தவறு. அண்ணி அனாதையாக ஊரை விட்டு வெளியேறி ஏதோ இன்று நல்லாயிருக்கின்றார்கள். நீ தற்செயலாகச் சேகரைச் சந்திச்சதாலை மீண்டும் எங்களுக்குள் உறவு ஏற்பட ஆண்டவன் தான் அருள் புரியணும்' என்றாள்.

'நீங்கள் ஏனம்மா அந்த நேரத்தில் அத்தைக்காக ..' என்று கேட்டுத் தாயை உற்றுப் பார்த்தாள்.

'நாங்கள் அப்ப கொழும்பிலிருந்தோம். இங்கே நடந்தவை எனக்குத் தெரியாது. இவரும் நான் எங்கள் குடும்ப விடயத்தில் தலையிட்டுக் கொள்வதை விரும்பவில்லை'

'அப்பா வரட்டும் நானே அவரிடம் இது பற்றிக் கேட்கப்போகின்றேன். மாமி வீட்டுக்கு. நானே போகின்றேன். சொந்தக்காரர்களை அந்நியர்கள் போல நடாத்தும் எமது மாமா ஆட்கள் எல்லாம் ஊருக்கும், உலகத்திற்கும் பெரியவர்களாம், மனிதர்களாம் சீச்சீ நினைக்கவே வெட்கமாயிருக்கு.'

'தர்சி பெட்டைக் கோழி கூவி விடியாதம்மா'

'நீங்க பேசாமலிருங்கம்மா. பெரியத்தான் ஜெர்மனியில் நிற்கின்றார். சின்னத்தான் பெரிய பதவியில் இருக்கின்றார். மச்சாள் இருவரும் கல்யாணம் செய்திட்டினம். இத்தனையும் சித்தப்பா, பெரியப்பா என்றிருப்பவர்களுக்கு தெரியாது. இரத்த உறவு கூடத் தெரியாதவங்கள்—எங்களோடு மட்டும்.. ஏன் அப்பா உத்தியோகத்தன் என்றா?' அவளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் வெறுப்புணர்வு நிறைந்திருந்தது.

'தர்சி உன்னையே தன் மகனுக்குக் கல்யாணம் செய்து தரும்படி சின்னமாமா அடிக்கடி கூறுவான். நீ தேவையில்லாமல் அவர்களைப் பகைத்துக் கொள்ளாதே.'

'உங்கண்ணன்மாரின் புத்தி தானே உங்களுக்கும் வரும். அம்மா எங்கள் சொந்தக்காரர்களை நான் வெறுக்கலை. அதேவேளை எங்கள் சொத்துக்காக கல்யாண பந்தம் ஏற்படுத்த முனையும். உங்க அண்ணனின் வேண்டுகோளும் என்னிடம் பலிக்காது. சேகர் அத்தானைப் பார்த்ததும் நான் ஒருமுடிவுக்கே வந்திட்டன்.'

'நீ என்ன சொல்லுறே தர்சி'

'அம்மா சேகர் அத்தானை நீங்கள் பார்க்கலை. பார்த்தால் உங்க மகளுக்கு ஏற்றவன் அவன்தான் என்று நீங்களே கூறுவீங்கள்.'

'தர்சி நீ ஆசைப்படலாம். நானும் விரும்பலாம் ஆனால் அவர்கள் விரும்பணுமே' என்று சரசுவதி கூறிமுடிக்கையில் வாசலில் காலரவம் கேட்டுத் திடுக்குற்றுத் திரும்பினாள். (வளரும்)

# தமிழ் மரபில் இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைகள்

கலாநிதி நா. சுப்பிரமணியன்

5

## மரபு யாருக்கு? ஏன்?

தொல்காப்பியத்தின் 'இலக்கிய இயல்' எனத்தக்க பொருளதிகாரமும் அதில் அமைந்துள்ள மரபு என்ற விதிமுறைத் தொனியும் யாரை நோக்கி அமைந்தன? எத்தகு சூழலில் அந்நூல் 'மரபு பற்றிப் பேசியது? என்பன நமது சிந்தனைக்குரிய வினாக்கள்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் பொது வழக்கு. அவ்வகையிலே தொல்காப்பியம் தனது காலப் பகுதிவரையான மொழி, இலக்கியச் செல்நெறிகளை அவதானித்து இலக்கணம் கூற முற்பட்டது என்று பொதுவாக விடைகூறலாம், எனினும் அதில் தொனிக்கும் மரபு என்ற விதிமுறை எண்ணப்பாங்கிற்கு சிறப்பான காரணங்கள் இருக்கலாம் என்று சிந்திப்பதற்கும் இடமுண்டு.

சட்டம் அல்லது விதிமுறை என்பதுபொதுவாகச் சூழலின் தேவையை ஒட்டியே உருவாவதாகும். தொல்காப்பியத்தின் மரபுத் தொனிக்கும் ஒரு சூழலின் தேவை இருந்தது என்பது ஊகத்தாற் கொள்ளப்படும். இந்நூல் கி. பி. 5—6 ஆம் நூற்றாண்டுகள் சார்ந்தது ஆகலாம் என்பது எமது பொதுவான கருத்து. மேற்படி காலப் பகுதியில் தமிழ்நாடு தன்னரசிழந்து அந்நியர் எனக் கருதப்படும் களப்பிரர் வசம் இருந்தது. பண்டைத் தமிழ் மூவேந்தர் மரபுகள் வலிகுன்றியிருந்தன. தமிழ்நாட்டின் வட பகுதியில் வடமொழிச்சார்பானவரான பல்லவர்களது ஆதிக்கத்தில்இருந்தது. அத்தகைய சூழலில் வட நாட்டின் பண்பாடு தமிழகத்தில் பல்வேறு மட்டங்களில் செல்வாக்குச் செலுத்தவும், ஊடுருவவும் முற்பட்டிருந்தது என்பது வரலாற்றுச்சான்றுகளால் தெரியப்படும் செய்தி இதனால் தமிழர்தம் இயல்பான பண்பாட்டுக் கூறுகள் எவை என இனங்காணவும் காட்டவும் வேண்டியதொருவரலாற்றுத் தேவை. அன்று நிலவியது எனலாம். இத்தகைய தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்வதாக தொல்காப்பியம் எழுந்தது எனக் கருத இடமுண்டு. பிற பண்பாட்டால் தமிழ்ப் பண்பாடு சிதைதலாகாது என்ற பாதுகாப்புணர்வின் குரலாக அந்நூலின் மரபுத்தொனி அமைந்தது எனக்கருதுவது தவறாகாது.

தொல்காப்பியத்தின் மரபுத் தொனியின் முக்கியத்துவத்தை — வரலாற்றுத் தேவையை — மேலும் உரியவாறு விளங்கிக் கொள்வதற்கு அந்நூல் எழுந்த காலப் பகுதிக்குச் சிறிது பிற்காலத்தில் (கி. பி. 8ஆம் நூற்றாண்டளவில்) நிகழ்ந்த ஒரு இலக்கியச் செயற்பாட்டை இங்கு சுட்டிக் காட்டலாம். அக்காலப்பகுதியைச் சார்ந்த ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கை மனனர் இயற்றிய பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆகிய பிரபந்தங்களிலே இதனை அவதானிக்கலாம். இவை பெருந்திணை என்ற அகப்பொருண்மையின் ஒரு கூறான மடலூர்தல் சார்ந்தவை. மடலூர்தல் என்பது ஒரு தலைப்பட்சமான காதலைத் திருமணம் என்ற நிலைக்கு இட்டுச் செல்ல வலிந்து மேற்கொள்ளும் ஒரு நாணமற்ற செயற்பாங்காகும். இத்தகைய முயற்சியை இலக்கியப் பொருளாக எடுத்தாள முற்படும் பொழுது பெண்கள் மடலூர்ந்தனர் எனக் கூறுவது தமிழ் மரபில்லை.

''எத்திணை மருங்கினும்
மகடூஉ மடன்மேற்
பொற்புடை நெறிமை
இன்மையான''
(பொருளதி; 38)

என்பதுதொல்காப்பியக்கூற்று' பெண்கள் மடலூர்வர் என்பது பெருமை தருவதன்று என்பது இதன் தெளிபொருள். தொல்காப்பிய காலத்திற்குச் சற்று முன் பின்னாக எழுந்திருக்கக் கூடிய திருக்குறள்,

கடலன்ன காமம் உழந்தும்
மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க
தில்
(குறள் 1137)

எனப் பேசுவதும் இத் தொடர்பிற் சிந்தனைக்குரியது. இவ்வாறு பெண்மை மடலைத் தவிர்த்திருந்த தமிழ்ப்பாரம்பரியத்தை அறிந்திருந்தவர் திருமங்கை மன்னர். அறிந்தும் அதனை மீறுகிறார் தாம் தமிழ் மரபை மீறுவதை அவர் வெளிப்படையாகவே சுட்டுகிறார்.

'அன்ன நடையா ரலரேச
ஆடவ்ர் மேல்
மன்னும் மடலூரார் என்ப
தோர் வாசகமும்
தொன்னெறியிற் கேட்ட
றிவ துண்டதனை யாம்
தேறோம்
மன்னும் வடநெறியே
வேண்டினோம் '
(பெரிய திருமடல்)

என அவர் சுட்டித்தொடர்கிறார். பெண்கள் மடலூர்கின்றனர் என்ற பொருள் புலப்பட அவரது பெரிய திருமடல், சிறியதிருமடல் இரண்டும் அமைகின்றன

இதனை நோக்கும் போது தொல்காப்பியம் எழுந்த காலப்பகுதியிலும் இத்தகைய மீறல்கள் தலைதூக்கியிருக்கலாம் என்பது உய்த்துணரற்பாலது. தொல்காப்பியம் வகுத்த பொருளிலக்கணத்தையும் அதன் மரபுத்தொனியையும் காரண காரிய ரீதியாக விளங்கிக் கொள்வதற்கு மேற்குறித்தவை துணைபுரிகின்றன.

## விதிமுறை இலக்கணத்தின் விரிநிலை

இலக்கியத்தின் உள்ளடக்கம், உருவம் 'பயன் மரபு முதலியன தொடர்பாகத் தனித்தனி சிந்தித்துள்ள தெனினும் செய்யுள் அல்லது இலக்கிய அமைப்பு என்பது மேற்படிக் கூறுகள் யாவற்றினதும் திரண்ட அமைப்பென்றே கருதியது. அதன் செய்யுளியலின் முதல் நூற்பாவுக்குப் பேராசிரியர் தரும் முன்னர் சுட்டிய விளக்கம் இதனையே உணர்த்துவதாகும். இதையே பிற்கால ஆய்வாளர் அவயவிக் கோட்பாடு எனவிளக்கினர் தொல்காப்பியத்தில் சில பாவகைகளுக்குத் தரப்பட்ட இலக்கணம் அவற்றின் பொருண்மை சார்ந்தனவேயன்றி வடிவம் பற்றியன அன்று. வெண்பாவின் வகைகளாகச் சுட்டப்பட்ட கைக்கிளை, அங்கதச் செய்யுள் என்பன இவ்வகையினவாம். பொருள்வடிவம் என்பவற்றை வேறுபடுத்தி நோக்கவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறாத ஒரு சூழலிலேயே தொல்காப்பியத்தின் இலக்கியக் கொள்கை முன்வைக்கப்பட்டது என ஊகிக்க முடிகிறது.

தொல்காப்பியர் காலத்துக்குப் பின் மேற்படி நிலையில் மாற்றம் நிகழ்வதனை அவதானிக்கலாம். குறிப்பாக இலக்கியத்தின் உள்ளடக்கம்' உருவம், உணர்த்துமுறை என்பன தனித்தனியாகச் சிந்திக்கப்படத் தொடங்குகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணை மரபைத் தழுவியும் கால வளர்ச்சிகளோடொட்டியும் அகப்பொருள் இலக்கணங்கள் தனியே எழலாயின. சான்றுகளாக இறையனார் களவியலுரை நம்பியகப்பொருள் என்பவற்றைச் சுட்டலாம். இவற்றுள் முன்னையது அகத்திணை களவு என்ற ஒரு அம்சத்தை மட்டும் பேசுவது. தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் இடம்பெற்ற விடயங்கள் பிற்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன் புறப்பொருள் வெண்பாமாலை எனத் தனியிலக்கணமாக விரிவடைகின்றன.

தொல்காப்பியத் திலே செய்யுள் என்பது மொழியை ஊடகமாகக் கொண்ட வெளிப்பாட்டு முறைகள் யாவற்றையும் சுட்டும். விரிந்த பொருண்மை கொண்டிருந்தது. யாப்பு என்பது அதன் அமைப்பு நிலையைக் குறித்தது. பிற்காலத்திலே இவ்விரு சொற்களும் பொருட்சுருக்கம் எய்திப் பாட்டுஎன்று குறித்த ஒரு வடிவ நிலையைக் குறிக்கலாயின. இவ்வாறு குறிக்கும்போது அவற்றைப் பொருண்மையுடன் இணைக்காமல் வெறும் புதவடங்களாக — உடலாக — மட்டும் கருதலாயின. கி. பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த யாப்பருங்கல விருத்தியுரையிலே யாப்பு என்பது 'சட்டகக் கட்டுரை' எனச் சுட்டப்பெற்றமையை அவதானிக்கலாம். சட்டகம் என்பது புறவடிவம் எனப் பொருள்படுவது. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் எழுந்த நன்னூல்,

''பல்வகைத் தாதுவின்
உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட
னாகி யுணர்வினின்
வல்லார் அணிபெறச்
செய்வன செய்யுள்''
(நூற்பா: 268)

என்கிறது. இதிலே செய்யுளை உடல் எனக்கூறும் தொனியை அவதானிக்கலாம். இக்கருத்து கி. பி. 18ஆம் நூற்றாண்டின் தொன்னூல் விளக்கத்திலும்,

''சிறைமுதல் யாப்புரச்
சேருயிர்க் குடல்போல்
உரைமுதல் யாப்புற உணர்
பொருட் குடலாச்
சிறப்பில் செய்வன செய்
யுள்''
(நூற்பா: 202)

அமையக்காணலாம். இலக்கிய ஆக்கமொன்றை உயிரும் உடலுமாக வேறுபடுத்திச் சிந்திக்கும் எண்ணப் பாங்கு வலுப்பெற்று நிலைபெற்று விட்ட வரலாற்றை இவை உணர்த்தி நிற்கின்றன.

தொல்காப்பியத்தின் செய்யுளியலில் அம்மை, அழகு, தொன்மை, தோல் முதலியனவாகச் சுட்டப்பட்ட எட்டு வனப்பியற் கூறுகளும் இலக்கிய வகைகள் பற்றிப் பேசுவன. அந்நூலின்—புறத்திணை இயலிலும் சில இலக்கிய வகைகள் பேசப்படக் காணலாம். இலக்கிய வகைகள் தொடர்பாக அந்நூல் தனி இலக்கணம் வகுக்கவில்லை. ஆயின் பிற்காலத்திலே 'பாட்டியல்' என்ற ஒரு தனி இலக்கணம் தோற்றம் பெறுகிறது. தொல்காப்பியத்தின் பின் வளர்ந்து வந்துள்ள இலக்கிய ஆக்க நிலைக்கேற்பச் செய்யுளியல் சிந்தனை எய்திய பரிணாமமாகப் பாட்டியல் என்ற இலக்கண முறைமை அமைகிறது. இவ்வாறு எழுந்த பாட்டியல் நூல்களில் கால முதன்மையுடையதாக எமக்குக் கிடைப்பது கி. பி. 12ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளப்படும் பன்னிரு பாட்டியல் ஆகும். இதனை அடுத்து பல பாட்டியல் நூல்கள் எழுந்தன.

தொல்காப்பிய உவமையியலில் இடம்பெற்ற விடயங்கள் பிற்காலத்தில் அலங்காரம் (அணியியல்) என்ற தனி இலக்கணமாக அமைகின்றன. கி. பி. 11ஆம் நூற்றாண்டு சார்ந்ததாகக் கருதத்தக்க தண்டியலங்காரம் இவ்வகையில் எமக்குக் கிடைக்கும் கால முதன்மையுடைய நூலாகும். இதனை அடுத்து மாறனலங்காரம் என்ற நூல் எழுந்தது. இவற்றுக்கு அமைந்த அலங்காரம் என்ற பெயர் தமிழிலக்கண மரபில் வடமொழிபெறத் தொடங்கிவிட்ட செல்வாக்கிற்கு சான்றாகச் சுட்டத்தக்கது.

மேற்கூறிய வகைகளில் விரிந்து சென்ற இலக்கணக் கூறுகள் இலக்கிய ஆக்கத்தைப் புலமை சார்ந்த ஒரு தொழிற்பாடு என்ற நிலைக்கு இட்டு வந்தன. அதாவது உணர்வின் வெளிப்பாடாக அமைய வேண்டிய இலக்கியம் மொழி சார்ந்த புலமையின் திட்டமிட்ட செயற்பாடு என்ற பரிணாமத்தை எய்தத் தொடங்கி விட்டதை அவதானிக்கலாம். மேற்சுட்டிய நன்னூல் நூற்பாவில் ''உணர்வினின் வல்லோர்'' என்ற தொடருக்கு 'கல்வியறிவிலே வல்லவர்கள்' என்றே பொருள் கொள்ளப்பட்டுள்ளமை இதனைத் தெளிவுபடுத்தும். இவ்வகையில் இலக்கிய ஆசிரியன் தொடர்பாக — படைப்பாளி தொடர்பாக — அக்காலப்பகுதியில் உருவாகி வந்துள்ள சிந்தனை நமது கவனத்துக்குரியதாகிறது.

## இலக்கிய ஆசிரியன் தொடர்பானசிந்தனை

ஆசிரியன் என்ற சொல் 'ஆச்சார்ய' என்ற வடமொழிச் சொல்லின் தமிழ்நிலை ஆகும். இச்சொல் பொதுவாகக் கல்விகற்பிப்பவரை— உபாத்தியாயரைக் — குறித்துப் பயில்வது, இலக்கியம், இலக்கணம், உரை, பல்துறை மொழியாக்கங்கள் என்பவற்றைத் தருவோரையும் ஆசிரியன் எனச்சுட்டும் வழக்கு நமது பாரம்பரியத்தில் நிலவி வருகிறது. இலக்கிய ஆசிரியன், நூலாசிரியர், உரையாசிரியர் என்றும் வழங்கி வருவதை இத்தொடர்பில் நாம் நினைவு கூறலாம். இலக்கிய ஆசிரியனை இன்று நாம் சிருஷ்டிகர்த்தா, படைப்பாளி என்னும் தொடர்களாலும் சுட்டுகிறோம்.

தொல்காப்பியம் இலக்கியம் என்ற சொல்லை வழங்காமையால் அதில் இலக்கிய ஆசிரியன் தொடர்பான சிந்தனை எவ்வாறிருந்தது என்பது தெளிவாக அறியக் கூடியதாயில்லை. அதுமொழி சார் எல்லா ஆக்கங்களையும் செய்யுள் என்றே சுட்டி நின்றதென்பதை முன்னரே நோக்கினோம். செய்யுட் செய்வோர் புலவர் என்ற வழக்கு அக்காலத்தில் நிலவியது. தொல்காப்பியம் புலவர் என்ற சொல்லை இலக்கண ஆசிரியர்களைக் குறித்துப் பெருவழக்காகப் பயன்படுத்தியுள்ள்து. 'என்மனார் புலவர்' என்பன போல வரும் தொடர்கள் இதற்குச் சான்றானவை. அக்காலப்பகுதியில் எல்லாவகைச் செய்யுட்களின் ஆக்க கர்த்தாக்களும் புலவர் எனச் சுட்டப்பட்டனர் என்று கருதச் சான்றுகள் உள. ஆசிரியன் என்ற சொல்லும் அக்காலத்தில் மேற்படி பொருண்மை சுட்டி வழங்கி வந்தது. அகவல் என்ற பா வடிவம் ஆசிரியப்பா எனப்பெயர் பெற்றமைக்கு ஆசிரியர்களால் அது பெருவழக்காகப் பயன் படுத்தப் பட்டமை காரணமாகலாம் என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

இவ்வாறு, செய்யுட் செய்வோரைப் பொதுவாகப் புலவர், ஆசிரியர் என்பனவாக வழங்கிவந்த மரபிலே இலக்கியப் படைப்பாளியையும் அவை குறித்து நின்றன என்பது தெளிவாகும். புலவர் என்ற சொல் இலக்கிய ஆசிரியன் என்ற நிலையிற் பெறும் பொருள் விளக்கத்தை முதலில் சிலப்பதிகாரத்தில் (கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன் பின்னாக எழுந்ததாகக் கருதப்படுவது) அவதானிக்க முடிகிறது. அதன் அரங்கேற்று காதையில் மாதவியின் அரங்கேற்றத்திற்குத் துணைக்குழுவாக அமைந்த இசையோன், தண்ணுமை முதல்வன் முதலியவர்களுடன் நன்னூற் புலவன் என்ற சுட்டால் இந்த இலக்கிய ஆசிரியன் சுட்டப்படுகிறான்.

'இழிழ் கடல் வைப்பிற்
றமிழகமறியத்
தமிழ் முழு தறிந்த தன்
மையனாகி

12-ம் பக்கம் பார்க்க

# மருத்துவ - உளவியல் துறைகளில் ஹிப்னாடிசம்

ஹிப்னாடிசம் என்பது உளவியல் துறையிலும் மருத்துவத்துறையிலும் அடிபடும் ஓர் முக்கிய சிகிச்சை முறையாக இப்போது விளங்குகிறது. வியன்னாவைச் சேர்ந்த அன்ரன் மெஸ்மர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இம்முறை 1841- இல் ஜேம்ஸ் ப்ரோய்ட்டின் செய்முறையில் ஹிப்னாடிசம் உலகிற்கு அறிமுகமானது.

மருத்துத்துறையைப் பொறுத்தவரை எத்தனையோ சிகிச்சை முறைகளினால்மாற்ற முடியாத பல நோய்கள் ஹிப்னாடிசம் மூலம் மாற்றப்பட்டுள்ளன. வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவது. பின் தங்கிய மாணவரை முன்னேற்றுவது, நோய்தீர்ப்பது போன்ற பணிகளுக்கு ஹிப்னர்டிசம் உதவுகின்றது.

துரதிர்ஷ்ட வசமாய் ஹிப்னாடிசம் மேடைகளில் வேடிக்கைப் பொழுதுபோக்காகவும், கேலிக்கூத்தாகவும், பணம் சம்பாதிக்கும் ஓர் வழியாகவும் இன்று பல நாடுகளிடையே பரவிவிட்டது. இதனால் மனிதனுக்குக் கிடைக்க வேண்டிய பல நன்மைகள் சிதறடிக்கப்பட்டு விடுகின்றன.

தற்போது பல மேற்கு நாடுகள் மேடை ஹிப்னாடிசத்தைத் தடைசெய்யச் சட்டம் கொண்டுவந்துள்ளன. ஹிப்னாடிசத்தை யாரும் பழகிக் கொண்டுவிடலாம். ஆனால் மருத்துவத்துறையில் முக்கியம் வகிக்கும் ஹிப்னோ தெரபி என்பது அவ்வளவு எளிதான விடயமல்ல. 'மனம்' என்பதை அடிப்படையாகக் கொண்டே இது அமைந்துள்ளது.

> மருத்துவத்துறையைப் பொறுத்தவரை எத்தனையோ சிகிச்சை முறைகளினால் மாற்ற முடியாத பல நோய்கள் ஹிப்னாடிசம் மூலம் மாற்றப்பட்டுள்ளன. வாழ்கைத்தரத்தைமுன்னேற்றுவதுபின் தங்கிய மாணவரை முன்னேற்றுவது, நோய்தீர்ப்பது போன்ற பணிகளுக்கு ஹிப்னாடிசம் உதவுகிறது.

> ஹிப்னாடிசம்மூலம்ஒருவரை இலகுவாக ஆழ்மன நிலைக்கு அழைத்துச் சென்று அவரிடமுள்ள எதிர் மறையான எண்ணங்களை தகர்த்து பயனுள்ள ஆக்கமும் ஊக்கமும் தரும் உயர்ந்த கட்டளைகளை கொடுத்து அவரின் பலபிரச்சனைகளையும் போக்கிவிடலாம்.

## மனம்

நாம் சாதாரணமாக இச்சொல்லை அடிக்கடி பாவிக்கின்றோம். மனம் என்றால் என்ன? யாருக்கும் தெரியாது!

ஹிப்னாடிசம் பற்றி அறிய வேண்டுமானால் முதலில் மனம் என்பதைப்பற்றி ஆராய்வோம். மனதைப் பலர் பலவிதமாகக் கூறுவர். யோக சூத்திரத்தின் ஆசிரியர் பதஞ்சலி முனிவர் மனதை ஏழு பிரிவாகப் பிரிக்கிறார். சிலர் இதை மூன்று பிரிவாகவும் பிரிப்பர். ஆனால் ஹிப்னாடிசத்தைப் பொறுத்தவரை மனம் இரு தளங்களில் இயங்குவதாகும்.

அன்றாடம் நாம் கவனிக்கும்போது வெளிமனம் இயங்குகிறது. நம் உணர்வுக்கு அப்பால் விழிப்பு நிலையில் நாம் அறியாதபடி இயங்குவது உள்மனம்.

மனம் என்ற தத்துவத்தை மனிதன் கொண்டுள்ளதாலேயே அவன் ''மனிதன்'' எனப்படுகிறான். புறச்சூழலில் ஏற்படும் பல மாற்றங்களை இந்த மனம் தான் உணர்ந்து செய்திகளை மூளைக்கு அனுப்புகிறது. மூளையின் செய்திக்கு ஏற்ப உடல் தொழிற்படுகிறது.

நம் உணர்வுக்கு அப்பால் நமக்குத் தெரியாது ஒளிந்திருப்பது உள்மனம் எனும் ஒருபகுதி. நீரிலே பனிக்கட்டியைப் போட்டால் அது முழுவதாக நீரில் மிதப்பதாக நாம் கூறுகிறோம். அதன் ஒரு பகுதி நீரில் அமிழ்ந்திருப்பதை நாம் காணுவதில்லை. நம் இருமனப்பிரிவை இது எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

ஹிப்னோ தெரபி என்ற மருத்துவமுறையில் இந்த உள் மனம் அதி முக்கியத்துவம் வாய்ந்தது. உள்மனத்தின் சக்திகளை நாம் அறிய முடிவதில்லை. ஆனால் இது சக்தி வாய்ந்தது மலை போன்ற மாபெரும் ஆற்றல்களை உடையது. இந்த உள்மனம் தான் நிறைகுடம். வெளிமனம் குறைகுடம்— தளம்பும். உள்மனதை அடையும் வழியை அறிந்து அதை அடைந்து விட்டால் உலகில் நாம் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.

உள் மனதை நாம் அறிய வேண்டுமானால் எம்மில் ஒவ்வொருவருக்கும் எப்போதாவது ஒரு தடவை எம்மையறியாது ஒரு அசாதாரண திறமை ஏற்பட்டு செயலை முடித்ததும் அதைநாம் தானா செய்தோம் என எமக்கே வியப்பை தந்த அனுபவங்கள் தோன்றியிருக்கலாம்.

விபத்தில் நடக்க முடியாத நிலை ஏற்பட்ட பெண் ஒருவர் குழந்தை ஒன்று நீரில் மூழ்கி அலறுவதைக் கேட்டு சுமார் முப்பது அடி தூரம் ஏழுந்து ஓடிச் சென்று குழந்தையைக் காப்பாற்றியிருக்கிறார். இது எப்படி? தாய்க்கு உரிய குழந்தைப் பாசம் சில கணநேரத்தில் அவளின் உள் உணர்வில் ஆழ்த்தியிருக்கிறது

கடந்த காலச் சம்பவங்கள் அனைத்தும் பிறந்த நாளில் இருந்து இன்றுவரை முழுமையாக உள் மனதில் பதிவாகி உள்ளது. உள்மனம்உலகோடு தொடர்பு கொள்ள ஐம்புலன்களின் உதவியை நாடுவதில்லை. அது கண்ணின்றிப் பார்க்கும் காதின்றிக்கேட்கும், மூக்கின்றி மணக்கும், நாக்கின்றி ருசிக்கும், தோலின்றி உணரும் ஆத்மா என்று கூறுவது இதைத் தானா?

அடுத்துஹிப்னோதெரபியில் அடிக்கடி பாவிக்கும் சொல் 'Suggestion' அதாவது பிரேரணைஒருவருடைய மனநிலையில் மாற்றத்தை உண்டாக்கும் சக்தி என்று இதைக் கூறலாம். மற்றவருக்கு தன் கருத்தை உள்ளுணர்வில் பதியும்படி மாற்றிவிட்டால் அந்தக்கட்டளையை பெற்றவரிடம் அது உயிர்பெற்று செயற்படத் தொடங்கிவிடும். இந்தக் கட்டளை புறமனதுக்கு கொடுக்கப்பட்டால் அது கட்டளைபற்றி விரிவாக ஆராய்ந்து பிரச்சினைகளையும் கிளப்பி கட்டளையை உயிரற்றதாக்கிவிடும் ஆனால் உள்மனதில் இது பதியப்பட்டால் இது உடனே உயிர் பெற்று விடுகிறது இது ஒட்டோ சஜசன் எனப்படுகிறது.

இனி இந்த பிரேரணைகள் சஜசன் பற்றிய உதாரணங்களை நோக்குவோம். பாரிஸில் நடந்த சம்பவம் ஒருவர் ஹோட்டல் ஒன்றில் அறை எடுத்து அன்றைய இரவை அங்கே கழித்தார். அவர் ஓர் ஆஸ்த்மாநோயாளி அறையன்னல்கள்மூடிஇருந்ததால் காற்றோட்டம் இல்லாதுஇவருக்கு நோய் அதிகரித்தது. யன்னலை திறந்தால் காற்று வரும் என்று எண்ணி யன்னலை திறக்க முயற்சித்தார். முடியவில்லை. செய்வதறியாது நோயினால் தவித்த அவர் கண்ணாடியை தன்கையால் அடித்து நொருக்கினார் உடைந்த கண்ணாடிகளூடாக குளுமையான காற்று வர அவர் நிம்மதியாக தூங்கிவிட்டார். காலை எழுந்துபார்த்த போதுஅவர் அறையில்இருந்த முகம் பார்க்கும் கண்ணாடி நொருக்கப்பட்டதற்குஹோட்டல் உரிமையாளர் கட்டணம் அறவிட்ட பில் இருந்தது நடந்ததுஎன்ன? அவர் யன்னல்கண்ணாடி என நினைத்து முகம் பார்க்கும் கண்ணாடியதைத் தான் இரவு உடைத்திருக்கிறார். அப்படி இருந்தும்அதனூடாககாற்றுவருவதாகஅவர் நினைத்து அவர் தூங்கி இருந்திருக்கிறார்.

ரஷ்யாவில் ஜார் மன்னர் ஆட்சிக்காலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவன் மீது சோதனை நடாத்தப்பட்டது. கைதியை படுக்க வைத்து அவன் கண்களை கட்டிவிட்டனர். ஒரு ஊசியால் அவனின் கையில் குத்திவிட்டனர். பின்னர் குழாய் ஒன்றின் மூலம் நீர்துளிகளை ஓர் வாளியில் சொட்டுச் சொட்டாக விழச் செய்தனர் நீர்விழும் சத்தம் அவன் இரத்தத்துளிகள் தான் என சோதனை செய்தவர்கள் கூறினர்.

உண்மையில் அவனும் தன் உடலில்இருந்துஇரத்தம்வெளியேறுகிறதுஎனநம்பினான். அவனது இந்த நம்பிக்கை உள்மனதில் பதிந்தது. சில மணி நேரத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பிரேரணையான அந்த அச்ச உணர்வு அவனது உயிரையே பறித்தது.

ஹிப்னாடிசம் மூலம் ஒருவரை இலகுவாக ஆழ்மன நிலைக்கு அழைத்துச் சென்று அவரிடமுள்ள எதிர்மறையான எண்ணங்களை தகர்த்துபயனுள்ள ஆக்கமும் ஊக்கமும் தரும் உயர்ந்த கட்டளைகளை கொடுத்து அவரின் பல பிரச்சினைகளையும் போக்கிவிடலாம். இதுதான் ஹிப்னோ தெரபியின் குறிக்கோள். ஒருவர் ஹிப்னோ தெரபிஸ்ட் ஆக மிகமுக்கிய தகுதி கட்டளையிடும் கலையில் அவருக்குள்ளதேர்ச்சி, திறமையிலேயேதங்கியுள்ளது.

## ஹிப்னாடிசம்

இங்கிலாந்து உளவியலாளர் ப்ரோய்ட்டு கொடுத்த புனைபெயரே இது. ஹிப்னோ என்ற கிரேக்க சொல் 'நித்திரையை' குறிப்பது. ஹிப்னோடிச நிலையில் ஒருவர் நித்திரையில் இருப்பதைப் போன்றே தென்படுவார்.

உறக்க நிலையில் உணர்வற்று வெளி உலகத்தொடர்பற்று இருக்கிறோம். உறங்குபவரிடம் நாம் ஏதும் கூறினால் அதுஅவரின் உள்மனதைச் சென்று அடையாது. ஆனால் ஹிப்னாடிசத்தில் உள் உணர்வு விழிப்பாக இருக்கும். சாதாரண உறக்கத்தில் நாம் புரண்டு புரண்டு படுப்போம். ஆனால் ஹிப்னாடிச நிலையில் அசைவே இருக்காது.

பல ஆயிரம் வருடங்களாக கீழைத்தேய நாடுகளில் இந்த முறைகள் இருந்திருக்கின்றன. முற்காலத்தில் மோகினி வித்தை என்றும் ஸம்மோகனவித்தை என்றும் குறிப்பிட்டார்கள். இதன் உச்சக் கட்டமே யோக நித்திரை. ஹிப்னாடிசத்தை சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்

'அகங்காரம் உள்ளடக்கி
ஐம் புலன் சுட்டறுத்து
தூங்காமல் தூங்கி
சுகம் பெறுவதுஎக்காலம்'
-பத்திரகிரியார்

,கள்ளப் புலன் எனும்
காட்டை வெட்டி
கனலிட்டு எரித்திட்டால்
காணலாம் வீடு
-கடுவெளிசித்தர்

ஹிப்பானாடிச நிலையில் எமக்கு தளர்வு நிலை ஏற்பட்டு அயர்வு அலுப்பு நீங்கி இருப்போம் இது ரிலக்ஷேசன் எனப்படுகிறது.

ஹிப்னாடிசம் மூலம் உள்மனதை அடைய முதலில் வெளிமனதை அடக்க வேண்டும். இதில் ஐம்புலன்களை அடக்குவதில் முக்கிய கவனம் வேண்டும். ஐம்புலன்களையும் ஒரேயடியாக அடக்க முடியாது. முதலில் ஐம்புலன்களில் சக்திவாய்ந்த பார்வையையும், கேள்வியையும் அடக்கி விட்டால் ஏனைய மூன்றும் தானே அடங்கி விடும்.

## ஹிப்னாடிச முறை

சிகிச்சை அளிக்க வேண்டியவரை கைவைத்த சாய்வு நாற்காலியில் அமர வைத்து சுகமாக இருக்கும்படி சொல்லி கடிகாரம் மூக்குக் கண்ணாடி சப்பாத்துப் போன்றவைகளை அகற்றச் செல்லவேண்டும்பின்ஏதாவது ஒரு பளபளப்பானபொருளை அவர் கண் முன் காண்பித்து அதையே உற்று நோக்கச் செய்யவேண்டும். விளக்கொளி ஏதும் சிகிச்சை அளிக்கப்படுபவருக்கு பின் புறமாகவே இருக்க வேண்டும்.

கைக்கடிகாரத்தைக்கூட அவர் கண்முன் காட்டி நேர் எதிரே இல்லாது இரண்டு அங்குலத்திற்கு கண்ணுக்கு மேல் உயரத்தில் தூக்கிக் காட்டலாம். காரணம் கண்ணுக்கு நேரே காட்டினால் அலுப்பில்லாமல் வெகு நேரத்துக்கு உற்று நோக்க முடியும். உயரத்தில் பிடித்தால் சிரமத்தோடு கண்ணை உயர்த்திப் பார்க்க செய்வதன் மூலம் கண்களுக்கு அயர்வை தோற்றுவித்து அவற்றை மூடச்செய்து பார்வைப் புலனை அடக்கலாம்.

அடுத்து செவிப் புலனை அடக்க நபர் பொருளை பார்த்துக் கொண்டு இருக்கும் போது நாம் தொடர்ந்து ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். 'கடிகாரத்தை உற்று நோக்கிக் கொண்டேயிரு உன்கவனத்தை இதன் மேல்செலுத்து இப்போது உன்உடல் கலகலப்பாய் தளர்வாய் உள்ளது. வேறு எந்த நினைவும் இல்லை இப்போது உனக்கு உறக்கம் வந்து விட்டது உறக்கம் கண்ணை சுழட்டுகிறது. கண்ணை மூடி அமைதியாக தூங்கு ஆழ்ந்த ஆனந்தமான உறக்கம்' இப்படிச் சொல்லிக் கொண்டு போகும் போது தாலாட்டுபோலவும் இருக்கும் காது இதை கவனிப்பதிலிருந்தும் விடும்.

இந்தத் தருணத்தில் ஹிப்னாடிஸ்ட் நான்ஒன்றிலிருந்து ஐந்து வரை எண்ணுவேன் ஐந்து எண்ணும் போது கண்ணை மூடிவிடு என்று சொல்கிறார். ஏற்கனவே உறக்க நிலையை எட்டிவிட்ட நபருக்கு இந்தக் கட்டளை நல்ல சாதகமாய் இருக்கும். ஐந்து வரை எண்ணி ஐந்து என்று சொல்லும் போது தம் கையில் உள்ள பொருளை மெதுவாக கீழே இறக்க மூடிய நிலையில் உள்ள நபரின் கண் முழுவதுமாக மூடிவிடும்.

வெளிச்சத்தங்கள் மங்கி விட்டன என்பேச்சைக் கூட கவனிக்க வேண்டியதில்லை. நான் சொல்வது ஒவ்வொன்றும் உன் மனதில் பதியப் பண்ணு' இப்படிச் சொல்ல ஊவர செவிப்புலனும் நழுவி விடுகிறது.

பொதுவாக ஹிப்னாடிசம் செய்முறை மூன்று வகையில் நோக்கப்படுகிறது. முதலாவது மெஸ்மர் முறை இரண்டாவது ப்ரோய்ட் முறை மூன்றாவது லயபொல்ட் முறை இது தான் கட்டளையிடும் முறை. எல்லா முறையிலும் கட்டளை முறை இருப்பதினால் லயபொல்ட் முறையே சிறந்தது என பலரும் கூறுகின்றனர். இம்முறைக்கு மிகுந்த உலக அனுபவம். மனோதத்துவ அறிவு, வாக்கு வன்மை, சொல்நயம், கணீர் என்ற குரல் போன்ற தகுதிகள் வேண்டும்.

ஹிப்னாடிச மயக்கத்தில் உள்ளவரை ஆட்டிப் படைக்கலாம் என்பது தவறு. ஹிப்னோ தெரபி செப்படி வித்தையோ, மாயாஜாலமோ இல்லை. இது விஞ் ஞானத்தின் ஒரு கலையம்சம் — ஓர் பிரிவு. ஹிப்னாடிசம் மூலம் தகாத செயல்களை செய்ய முடியாது என நிரூபித்துள்ளார் அமெரிக்கரான டாக்டர் எம். எரிக்சன்.

நாம்எதிர்பார்ப்பவைஇனிக் கிடைக்கும் என்று சொல்வதை விட சுவை கிடைத்து விட்டதாக நம்பவைப்பது சிறந்த முறை. இதை அடுத்

12-ம் பக்கம் பார்க்க

★ ஜீ: சிறீகாந்தன் ★

## கானாமிர்தத்தால் கருத்தில் கலந்த

# கண்டசாலா மகன்

# தமிழ்ப் பட ஹீரோவாகிறார்

கண்டசாலா ...........இந்த நாமத்துக்குச் சொந்தக்கார ரான கண்டசாலா வெங்க டேஸ்வரராவ் தனது அற் புதக்குரல்வளத்தால் தமிழ், தெலுங்குப்படவுலகில் பல இலட்சக் கணக்கானரசிகர் தம் இதய சிம்மாசனத்தில் நிலையாகக் குடிகொண்டிருப் பவர். கடந்தசில வருடங் களுக்கு முன் இவர்ஜீவன் பிரிந்து இவர் பூதவுடல் அற் றுப் போனாலும் இவர்பாடிய பாடல்கள் இன்றும்ஜீவனுள்ள காலத்தால் அழியாதகானங் களாக ரசிகர்மனதில் இடம் பிடித்துள்ளன.

டப்பாங்குத்துப் பாட்டுக் காரர்கள்எல்லாம் ''பிர பல பாடகர்களாக'' உலா வருகின்ற காலமிது. அரை வேக்காட்டுப் பேர்வழிகளெல் லாம் தம்மை சில மாறுபட்ட உடையலங்காரங்கள் மூலம் மக்கள் மனதைக் கவர்ந்து இமேஜை (?) பெருக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள். கலைஞர்கள் என்ற பெயரில் இத்தகைய நுனிப்புல்மேய்ந்த சோணகிரிகள் இன்றுபெறும் பிரபல்யம் காலத்தை வென்று நிலைக்கக் கூடிய ஒன்றல்ல இத்தகையோரது செல்வாக் கெல்லாம் காட்டாற்று வெள்ளம் போன்று காலம் போய்க் கொண்டிருக்கும் வேகத்தில் அடித்துச் சொல் லப்பட்டு விடும். ஆற்றல் உள்ள கலைஞரே பெருமை பெறுவர். இதற்கு சரித்தி ரம் சான்று பகரும் இவர்கள் நாளடைவில் வளர்ந்து வரும் சமுதாயச் சூழலில் செல்லாக் சாகிவிடுவர். பக்குவம் பெற்ற ரஸிகப் பெருமக்கள் இவர் களை தூக்கியெறியும் நிலை தவிர்க்க முடியாதது

ஆனால் இத்தகையோரிலி ருந்துவேறுபட்ட வராகப் பாடகர் கண்டசாலாதிகழ்ந் தார். அருமையான சாரீரம் கொண்டிருந்த இவர் சிறப் பான இசை ஞானமும் பெற் றவர்.

கண்டசாலா பாடிய 'தேவ தாஸ்' படப் பாடல்கள் இன் றும் தனித்துவம் பெற்றே விளங்குகின்றன.'உலகே மாயம், வாழ்வே மாயம்' என்ற பாடலால் நெகிழா தோர் இலர்.

டி. எம். சௌந்தரராஜ னின் குரல் சிவாஜி, எம். ஜி. ஆர். ஆகியோரது புகழுக்குப் பெரும் உறுதுணையாக இருந் தது போல் கண்டசாலாவின் குரல் ஏ. நாகேஸ்வரராவ் என். டி. ராமராவ் ஆகியோ, ரது பெரும் புகழுக்குத் துணையாக இருந்தது.

நாகேஸ்வரராவின் 'லைலா மஜ்னு படத்தில் கண்டசாலாவின் 'பறந்து செல்லும் பைங்கிளியே மறதி யாகுமா? என்றபாடல்'என். டி. ராமராவின் 'அமரகீதம் படத்தில் பி. லீலாவுடன் இணைந்த 'கண்பார்வை இரு ளாகி உயிர் வாழ்வதோ என்ற பாடல், சிவாஜிகணேச னின் கள்வனின் காதலியில் பி. பானுமதியுடன் இணைந்த 'வெயில்கேற்ற நிழலுண்டு' என்ற பாடல் இப் படிஎண்ணற்ற பாடல்கள் கண்டசாலாவின் புகழ் பரப்பி நிற்கின்றன.

இத்தகைய அரும் பெரும் சிறப்பாற்றல் பெற்ற கண்ட சாலாவின் மகன் ரத்தன் குமார் இப்போது தமிழ்ப் படம் ஒன்றில் ரேகாவுடன் சேர்ந்து கதாநாயகனாக நடித்து வருகிறார்.

டி. ராமாநாயுடு வழங்கும் ராஜேஸ்வரிபிலிம்ஸ் பட நிறுவனத்தாரின் சிவப்பு நிறத் தில் சின்னப்பூ' என்ற படத் தில் தான் இவர் கதாநாயக னாக நடிக்கிறார்.

இவர் பல தமிழ்ப்படங் களுக்குப்பின்னணி (டப்பிங்) குரல் கொடுத்து வருபவர். தெலுங்குப் படங்களில் சொந்தக் குரலிற் பல பாடல் கள் பாடியுமுள்ளார்.

இப்புதிய படத்திற்கு ஆர். செல்வராஜ் கதைவசனம் எழுதியுள்ளார். ராஜசேக ரன் கமராவைக் கையாள, புது இசையமைப்பாளர் ஜெய்சேகர் இசையமைக்கி றார்.

ரத்தன்குமார் கண்டசாலா வின் புகழுக்கு மெரு கூட்டித் தந்தை பெற்றிருந்த உயர் ஸ்தானத்தை எட்டிப் பிடிப் பாரா? பிடிக்கவேண்டும் என் பது தான் கண்டசாலாவின் ரசிகர்கள் ஒவ்வொருவரினதும் வேணவாவாகும்.

## ராஜசேகர் தன் 'ரேட்டை' உயர்த்துவது எப்போது?

இதுதாண்டா பொலிஸ்' டப்பிங் படம் வசூலை அள் ளிக் குவித்துக் கொண்டிருக் கிறது. அதன் கதாநாயகன் ராஜசேகரைத் தமிழ்ப்பட அதிபர்கள் பலர் வளைத்துப் போட முடிவெடுத்து வட்ட மிடத் தொடங்கி விட்டனர்,

வட்டமிடுவதைப் பார்த்த தும் 'ரேட்டை' ஏற்றாமல் இருப்பாரா?

ஆனால் இன்னும் அவர் ரேட்டை ஏற்ற வில்லை யாம். நாளை எப்படியோ,

## சத்தியராஜ் தாராளம்

ஸ்டன்ட் நடிகர்கள் தங்கள் சங்கத்தில்' ஜிம்'(உடற்பயிற்சி நிலையம்) அமைக்க விரும்பி சத்தியராஜைஅணுகினார்கள் 5000 ரூபா தருவார் என்று எதிர்பார்த்தார்கள்.

சத்யராஜ் 10 000 ரூபா நன்கொடையாக வழங்கி அவர்களை அசரவைத்து விட் டாராம்.

## கார்த்திக்... அப்பா பெயரை கெடுக்கலாமோ?

சிறந்த குணசித்திர நடிகரா கத் திகழ்ந்த முத்துராமனின் மகன் கார்த்திக் தனது தந்தையின் குணாதிசயத்துக் குப் புறம்பான வகையில் செயற்பட்டுலருகின்றார் என திரையுலகினர் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

முத்துராமன் சிவகுமார் போன்றவர்கள் எவ் விதவம்பு தும்புக்கும் போகா மல் தாம் உண்டு தம்பாடு உண்டு என்று நடக்கும் செயற்பாடு கொண்டார்கள்.

ஆனால் மறைந்த தனது தந்தையின் பெயருக்கு இழுக் குத் தேடும் வகையில் கார்த் திக் புதிய படங்களுக்குத் தனக்குப் பிரியமான நடிகை களையே கதாநாயகிகளாகப் போடச்சொல்லித் தயாரிப் பாளர்களுடன் 'முரண்டு' பிடிக்கிறாராம்.

கார்த்திக் மனதில் புதி தாக இடம் பெற்ற கதா நாயகி சித்தாரா 'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை' படத்தில் முதலில் சோடி சேர்ந்தார்கள். இப்போது தன் சம்பந்தப்பட்ட புதிய படங்களுக்குச் சித்தாராவைக் கார்த்திக் சிபார்சு செய்யத் தொடங்கியுள்ளாராம்.

# திரைக்கலசம்

தயாரிப்பு: கே.வி. ஆர்.ஸ்ரீ

## எம். ஜி. ஆர். பாணியினைப் பின்பற்றி தள்ளாட்டம் காணும் ராமராஜன்

இப்போது எம். ஜி. ஆர் பாணியிற் பாத்திரமேற்று புகழ் பெற்ற முனைந்துள்ளவர் நடிகர் ராமராஜன்.

இவர் நடித்த கரகாட்டக் காரன் வசூலை அள்ளிக் குவித்தது.

ராமராஜன் தன் படங்க ளில் புதுப்புது நாயகிகளாகப் போட்டு அறிமுகம் செய்யும் வேலை சரிதானா என்று இப் போது யோசிக்கத் தொடங்கி விட்டாராம்.

ராஜசுதாவுடன் அவர் சமீ பத்தில் நடித்த ஒருபடம் படு தோல்வி கண்டதால் இந்த மனமாற்றம் எனக் கூறப்படு கிறது.

காரணமே புது நடிகை என்று பரவலாகப் பேசப்படு வதால் பழையபடி கனகா, ரேகா, பல்லவி ரூபிணி என்று பாதையை மாற்றிவிடலாமா என யோசிக்கின்றாராம்.

## ★ ரஜனி ★ கமலை விஞ்சிய ராமராஜன்

ரஜனிகாந்த், கமலஹாசன் ஆகியோரிலும் பார்க்க இன்று ராமராஜனுக்கே படங்கள் அதிகம்: கரகாட்டக்காரன் பெற்ற மகத்தான வெற்றியே இதற்கு அடிப்படை.

ரஜனியையும், கமலையும் ராமராஜன் ஓவர்டேக் செய்து விட்டதாக இன்று படவுலகினர் பேசிக் கொள் கிறார்கள்.

## 'வசந்த மாளிகை'யை மறந்த மர்மம் தான் என்ன?

டி ராமாநாயுடுவுக்கு நடை பெற்ற பாராட்டுவிழாவில் அவர் தயாரித்த எல்லாப் படங்களையும் திரையிட்டுக் காட்டினார்கள்.

சிவாஜி நடித்துப் பெரும் வெற்றிபெற்ற 'வசந்த மாளிகை'யை மாத்திரம் மறந்துவிட்டார்கள்.

இந்த இருட்டடிப்புக்குப் பின்னணி என்னவென்று தெரியவில்லை.

## ரஜனி நடிப்பில் இப்போது 'காலம் மாறிப்போச்சு'

ஜெமினி கணேசன் கதா நாயகனாக நடித்து 'காலம் மாறிப்போச்சு' என்றொரு படம் பலவருடங்களுக்கு முன் னர் வெளிவந்தது ரசிகர்கர்க ளுக்கு ஞாபகமிருக்கலாம்.

இப்போது இதே பெயரில் தயாராகும் புதிய படமொன் றில் கதாநாயகனாக ரஜனி காந்த் நடிக்கிறார்.

அவருக்கு ஜோடியாக கௌதமி நடிக்கிறார்.

காக்கிச்சட்டை, படிக்காத வன், மாப்பிள்ளை போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய ராஜசேகரன் இப் படத்தை யும் இயக்குகிறார்.

கதை, திரைக்கதை, வச னம் எழுதுபவர் பஞ்சு அரு ணாசலம். இளையராஜா இசையமைக்கிறார். ரங்கா ஒளிப்பதிவு செய்கிறார்.

## 60 வயதை நெருங்கும் 'ஜேம்ஸ்பொன்ட்'

# ஸோன்கொனரி தனயனுக்கும் நடிப்பிலேயே நாட்டம்

'டொக்டர் நோ' முதலான ஆங்கிலப்படங்கள் மூலம் ரசி கர் மனதில் சிறப்பான இடம் பிடித்தவர் 'ஜேம்ஸ்பொன்ட்' ஸோன் கொனரி. ஜேம்ஸ் பொன்ட் பாத்திரத்தைத் தவிர இவர் நடித்த இதர பாத்திரங்களும் மகத்தான வரவேற்பைப் பெற்றன. சிகாகோ பொலிஸ்காரராக இவர் ஒரு படத்தில் நடித் தார். இவரது சிறப்பான நடிப்புக்காக ஆஸ்கார் விருது கிடைத்தது.

ஸோன்கொனரியின் மகன் ஜேசனுக்கு 27 வயதாகிறது. தந்தையைப்போல தானும் நடிக்கவே விரும்பும் இவ னுக்கு''நான் உனக்கு எதை யெல்லாம் படிக்கவேண்டும் என்று ஒரு லிஸ்ட் தருகி றேன்' என்று மகனுக்கு ஏகப் பட்ட நாடகங்கள், இதர புத்தகங்கள் அடங்கிய பட் டியலைக் கொடுத்திருக்கிறார் இவர்.

60 வயதை எட்டிக்கொண் டிருக்கும் இவருக்கு ஆஸ்தி ரேலியாவின் 'பீபிள்' என்ற பத்திரிகை 89 ம் வருடத்துக் கான விருது அளித்திருக் கிறது. என்ன விருது தெரி யுமா?'சுறுசுறுப்பாக இருக் கும் மகா செக்ஸியானமனிதர்'

ஸோன்கொனரி நடித்த ஃப்ரம் ரஷ்யா வித் லவ் கோல்ட் ஃபிங்கர், தண்டர் போல் யூ ஒன்லி லிவ்டுவைஸ் போன்ற படங்கள் உலகெங் கும் சக்கை போடு போட்டது தெரிந்ததே.

## ஹிந்தி வில்லன் பிரானுக்கு ஏற்படும் ஆதங்கம்

ஹிந்திப் படவுலகில் மிகப் பிரபல்யம் பெற்ற வில்லன் குணசித்திர நடிகர் பிரான்.

இவர் ஓர் பிரிட்டிஷ் பிரி யர். தான் லண்டனில் பிறந் திருந்தால் பத்து வருடங்க ளுக்கு முன்பே பிரிட்டிஷ் அரசு தனக்கு 'சேர்' பட்டம் தந்து கௌரவித்திருக்கும்என் கிறார்.

வட இந்தியப் படவுலகில் தனக்கு உரிய கௌரவப்பட் டம் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் இவருக்கு.

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

கப்ரின் D. A. M. குணசிங்கம்

உலகெங்கும் இன்று பலவிதமான புதுப் புது விளையாட்டுகள் பல நாடுகளினால் அறிமுகம் செய்யப்பட்டு உலக ரீதியில் அவை அங்கீகரிக்கப்பட்டு அவைகட்கு போட்டிகளும் நடத்தப்பட்டாலும் வெகு பழமை வாய்ந்த விளையாட்டான உதைபந்தாட்டத்திற்கு அன்று மக்கள் மத்தியில் நிலவிய மௌசு இன்றும் குன்றிவிடவில்லை. மாறாக பன்மடங்கு அதிகரித்துள்ளது.

1930 ஆம் ஆண்டிலிருந்து 4 ஆண்டுகட்கு ஒருமுறையாக உலகின் பல்வேறு இடங்களில் கடந்த 13 முறையாக நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி 14—வது தடவையாக இவ்வாண்டு யூன் 8—ம் திகதியிலிருந்து யூலை 8—ம் திகதிவரை இத்தாலியில் நடைபெறவுள்ளது. இறுதியாட்டம் இத்தாலியின் தலைநகரான உரோமில் யூலை 8—ம் திகதிநடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை இப்போட்டியில் பங்குபற்றப் பின்வரும்24நாடுகள் தகுதி பெற்றுள்ளன. ஆஜென்டீனா, பிரேசில், உருகுவே, கொலம்பியா. இத்தாலி, ருமேனியா, சுவீடன், ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, ருசியா, ஆஸ்ரியா, ஒல்லாந்து, மேற்கு ஜேர்மனி, யுகோசிலாவியா, ஸ்பெயின், அயர்லாந்து, பெல்ஜியம், செக்கோஸ்லாவியா, எகிப்து, கமரூன், தென்கொரியா, ஐக்கிய அரபுக் குடியரசு, கோஸ்ராதிக்கா, ஐக்கிய அமெரிக்கா இவற்றுள் 1986—ம் ஆண்டு சம்பியன்களான ஆஜென்டீனாவும், இம்முறை போட்டிகளை நடத்தும் நாடான இத்தாலி தகைமைகாண் போட்டிகள் எதிலும் பங்குபற்றாமலே மரபுப்படி இத்தாலியில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த 24 நாடுகளில் எந்த நாடு 1990—ம் ஆண்டு வெற்றிக்கிண்ணத்தை சுவீகரிக்கும் என்ற வினாவிற்கு உதைபந்தாட்ட வல்லுநர்களும் நிபுணர்களும் ஏன்; பிரசித்தி பெற்ற விளையாட்டுத்துறைப் பத்திரிகைகளும் கூட திட்டவட்டமாக ஒரு அணியைக் குறிப்பிட்டுக் கூறாமல் பல்வேறுபட்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளன. அவற்றுள் ஒரு சில 1958, 1962, 1970 ஆகிய 3 ஆண்டுகளில் உலக வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்ட பிரேசில் அணியே இம்முறையும் வெல்லக் கூடும் என்று ஒரு சில அவதானிகள் கூறுகிறார்கள். 1934, 1938, 1982 ஆகிய ஆண்டுகளில் உலக வெற்றிக்கிண்ணத்தை வென்ற இத்தாலியே வென்றெடுக்கும் என்று ஒரு சில வல்லுநர்கள் கூறுகிறார்கள். மேலும் அவர்கள் நடந்து முடிந்த 13 போட்டிகளில் 1930—ம் ஆண்டு உருகுவே நாட்டில் நடைபெற்ற போது உருகுவேயும் 1934—ம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்றபோது இந்தாலியும் 1966—ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போது இங்கிலாந்தும் 1974—ம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற போது மேற்கு ஜேர்மனியும் 1978—ம் ஆண்டு ஆஜென்டீனாவில் நடைபெற்ற போது ஆஜென்டீனாவும் வெற்றி பெற்றுள்ளன. அதேபோல் இம்முறை இத்தாலியும் வெற்றி பெறும் என்று கூறுகின்றனர். இவைகள் எல்லாவற்றிற்கு மேலாக உலகப் பிரசித்தி பெற்ற ஆருடர்கக்ளும் இத்தாலியே வெல்லும் என்று ஆருடம் கூறியுள்ளார்கள்.

1986—ம் ஆண்டு வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த ஆஜென்டீனாவே இம்முறையும் சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொள்ளும் என்று தென் அமெரிக்க உதைபந்தாட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஆஜென்டீனா அணியில் உலகப்பிரசித்தி பெற்ற வீரர்களான வல்டானோ, புரூசுலா ஆகியோர் அங்கம் வகிக்காது விட்டாலும் டெஸ்சொட்டீ, கிளாடியோ ஆகிய இரு வீரர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் அணிக்கு புதுமுகங்களாக இருந்த போதிலும் அதிசிறந்த வீரர்களாய் கணிக்கப்பட்டுள்ளதனால் இவர்களின் உதவியுடன் மரடானோ நிச்சயமாய் வெற்றிவாகை சூடுவார் என்றும் கூறுகிறார்கள்.

இவைகள் எல்லாம் ஒருபுறமிருக்க 1954, 1974 ஆகிய ஆண்டுகளில் சம்பியன்களாகவும் 1966, 1982, 1986—ம் ஆண்டுகளில் 2—வது இடத்தையும் (ஆகமொத்தம் 5 தடவைகள் இறுதிப் போட்டியில் ஆடிய) மேற்கு ஜேர்மனி இம்முறை வெற்றிபெற்றால் எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று'ஸ்போட்ஸ் ஸ்ரார்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. எதற்கும் யூலை 8 ம் திகதிவரை பொறுத்திருந்து பார்ப்போம் யார் 1990 ம் ஆண்டு உதைபந்தாட்ட உலகச் சம்பியன் என்பதை.

உலகக்கிண்ண முன்னைய 13 போட்டிகளின் விபரம்:—

1. 1930 ம் ஆண்டு முதன் முதலாகஉலககிண்ணஉதைபந்தாட்டம் உருக்வேயில் நடைபெற்றது. இதில் 18ப் போட்டிகள் இடம் பெற்றன. இறுதிப் போட்டியில் உருகுவே ஆஜென்டீனாவை 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப் போட்டியை ஏறக்குறைய 90 ஆயிரம் பேர் வரை பார்த்துமகிழ்ந்தனர். 70 கோல்கள் இப்போட்டியில் போடப்பட்டன.

2. 1934—ல் இத்தாலியில் நடைபெற்ற போட்டியில் இறுதியாட்டத்தில் செக்கோசிலாவாகியா வுடன் மோதிய இத்தாலி 2:1 என்ற கோல் விகிதத்தில் வெற்றி பெற்றது. நடை பெற்ற 17 போட்டிகளில் 70 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியை நேரில் பார்த்தவர்கள். 50 000 திற்கு மேற்பட்டவர்களாவர்.

3, 1938 ம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற போட்டியில் இத்தாலி, கங்கேரி 4;1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது. இத்தொடரில் நடைபெற்ற 18 போட்டிகளில் போடப்பட்ட கோல்களின் எண்ணிக்கை 84 ஆகும். இறுதிப் போட்டியை 45000 பேர் வரையில் பார்த்துமகிழ்ந்தனர்.

4. 1950 ம் ஆண்டு 4 வது போட்டி பிரேஸிலில் நடை

12ம் பக்கம் பார்க்க

# பாரிய பணி

## நூல் விமர்சனம்

★ முருகையன்

நூல்!

திருக்கேதீச்சர மான்மியம்

புராதன காண்டம்

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை வெளியீடு.

ஏழாலைப் பண்டிதர் மு. கந்தையா வடமொழியிலும் தமிழிலும் வல்லவர், ஆங்கிலம் அறிந்தவர், சித்தாந்த அறிஞர்; செய்யுளியல் தேர்ந்த புலவர்; பிரபந்தங்கள் பலவற்றை இயற்றியுள்ளார். இவர் இப்பொழுது பெரியதொரு நூலை இயற்றும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

பெருமை மிக்க அந்த நூலின் பெயர் — திருக்கேதீச்சர மான்மியம் என்பது, ஆறு காண்டங்கள் கொண்ட விரிவான நூலாகப் பண்டிதர் இதனைத் திட்டமிட்டுள்ளார். இந்த ஆறு காண்டங்களுள் முதலாங் காண்டமாய் அமைவது 'புராதன காண்டம்' புராதன காண்டம் என்னும் அந்தப் பகுதி மாத்திரம் தனியானதொரு புத்தகமாகச் சென்ற ஆண்டு வைகாசி மாதம் வெளியாயிற்று.

ஈழநாட்டிலே தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் இரண்டனுள் ஒன்றாகிய திருக்கேதீச்சரத்தின் அருமை பெருமைகளைத் 'திருக்கேதீச்சர மான்மியம்' பேசுகிறது முதலாவதாய் வரும் புராதன காண்டத்திற் பன்னிரு படலங்கள் உள்ளன. இதுவரை வெளிவந்துள்ள பன்னிரு படலங்களிலும் எண்ணூறுவிருத்தப் பாட்டுகள் உள்ளன.

நாட்டுப் படலம், நகரப் படலம், ஆற்றுப் படலம் என்பன மரபு வழிப்பட்ட காப்பியங்களிலும் புராணங்களிலும் இடம்பெறும் பகுதிகளாகும். பண்டிதர் இந்த நூலிலே ஈழநாட்டையும் மாதோட்ட நகரையும் பாலாவி ஆற்றையும் விரிவாக வருணித்துப் பாடியுள்ளார். நாட்டுப் படலத்தில் ஈழநாட்டின் இதிகாசமும் வரலாறும் புவியியல் வளமும் பண்பாட்டுக் கூறுகளும் பேசப்படுகின்றன. இவற்றை எடுத்தாளுகையிலே புராணங்களையும் ஐதிகங்களையும் அகழ்வியல் — வரலாற்றுச் சான்றுகளையும் நிகழ்கால நிதரிசனங்களையும் பண்டிதர் ஒருங்கே துணைக் கொண்டுள்ளார். ஆகவே புராணப் போக்கும் வரலாற்றுச் சிறப்பும் காப்பிய மிகைப்பாடும் உள்ள ஒருமுக்கூட்டுக் கலவையாக இந்தப் படலம் உள்ளது. இந்தப் படலம் மட்டுமன்றி இந்தப் புராதன காண்டம் முழுவதிலுமே மேற்சொன்ன முக்கூட்டு நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கிறது. இது பண்டிதர் கந்தையாவுக்கே உரிய புலமைப் போக்கின் தனித்தன்மை என்று கூறிவிடலாம்.

இவற்றுள் நிகழ்கால நிலைமையைப் படஞ் செய்வதில் இவர் கடைப்பிடிக்கும் நிதானமும் தாராளத் தன்மையும் குறிப்பிடத் தக்கவை. கதிர்காமத் திருவிழாக் காலத்திலும் வெசாக் விழாச் சமயத்திலும், கடல் அலை பெயர்வதுபோல காடு மேடு எங்கும் தெய்வ கோஷங்கள் முழங்குகின்றனவாம். அவற்றைப் பாடுகிறார் பண்டிதர்.

''ஐயனே முருகா கந்தா
'அரோஹரா' என்றும் கந்த
தெய்யோ ஹோ சாதுசாது
கருணாவாய்என்றும்எங்கும்
தையலார் மைந்தர் வாயில்
தழை ஒலி தயங்கும் ஈழம்
பொய் பழிதுடைத் தெஞ்
ஞான்றும்
புனிதமே லோங்க நிற்கும்'

மற்றுமோர் இடத்திலே, ஈழத்தில் வழங்கும் மார்க்கங்களைப் பின்வருமாறு வகுத்துரைப்பதும் மனங் கொள்ளத் தக்கது—

'உய்ய ஊக்கும் பௌத்தம்
இஸ்லாமுடன்
வையம் வாவும் விவிலியம்
ஆதிய
தெய்வ வாய்மை தெரிப்
பன ..'

பௌத்தமும் இஸ்லாமும் உய்தியை நாடுமாறு ஊக்குகின்றனவாம். கிறிஸ்தவத்தை விவிலியம் என்கிறார் நமது பண்டிதர். விவிலியம் வையம் வாவிய மதமாம். உலகம் எங்கும் கிறிஸ்தவம் பரவலாகப் பயில்கின்ற பான்மையைத்தான் பண்டிதர் இப்படிச் சொல்கிறார். இவை எல்லாம் தெய்விகமான உண்மையைத் தெரிவிப்பனவாம்.

'ஆயினும் சைவமாண் பு
தலம்புகழ் சால்பிற்றே'

என்பார் பண்டிதர். அதுஅவருடையகருத்தியல்சித்தாந்தத் துணிபு.

பாலாவி ஆற்றின் உற்பத்தியையும் மலை உச்சிகளினின்றும் விரைந்தோடிவந்து கேதீச்சரம் என்னும் தலத்துக்கு அண்மையில் 'பாலாவி, என்னும் கிளைப்பெயர் பெறுவதையும் புவியியல் யதார்த்தத்துக்கு அமைவாகப் பண்டிதர் பாடியுள்ளார். ஆற்றுப் பெருக்கைப் பாடுக்கையில், பண்டிதரின் பாட்டு நடையும் வேகம் பெறுகிறது,

''கனத்திடித்து உரறிக்
கான்று கடுகு நீர் முடுகி
ஓடி வனத்தரு வளங்கள்
வாரி வார்புனற்பெருக்கு
மண்டிப் புனத்தலைப்
பொன் மான் மேவும்
புதுமை கூர் மிகிந்தலைப்
பாற் சினத்திடி முகில்
பெய் நீரும் சேர்ந்தொரு
பேராறாகும்''

இவ்வாறான இடங்களிலே பண்டிதரின் தமிழ், பாட்டியல் நலம் பொருந்தி விளங்குவதை உணர்கிறோம்.

பாயிரப் படலத்தில், இந்நூலின் கதை வரலாறு பேசப்படுகிறது. முன்னொரு காலத்திலேபொதிகைமலையிலிருந்து மன்னார்த்துறையைஅடைந்த வணிக்க கூட்டமொன்று குளுயானைக்குழு வொன்றின் ஆக்கிரமிப்புக் குட்பட்டுக் காட்டில் அலைந்துலைந்து களைப்பினாலே உறங்க நேரிட்டது. அந்த வணிகர்களின் கனவிலே, சீருந்திருவும் பொலிய விளங்கும் பழங் கோயிலொன்றும், பின்னர் அது மண்மேடாக மாறியதும் தோன்றுகின்றன. திகைப்படைந்த. வணிகர்கள், பொதிகை மலைக்கு மீண்டு போய் பொதிய மலையிற் செய்தி பரப்ப அதுகேட்ட தபசிகள்சிலர் அகத்திய முனிவரிடம் விளக்கம்கேட்கிறார்கள் அகத்திய முனிவர்திருக்கேதீச்சரத்தின் மகிமைகளை எடுத்துக் கூறுகிறார்.

அகத்தியர் சொல்வதாக வருவது தான் இந்த நூலில் இடம் பெறும் திருக்கேதீச்சர மான்மியம்.

மேரு மலையின் சிகரங்கள் மூன்றை வாயுதேவன் பறித்தெடுத்துத் தெற்கு நோக்கி வீசினான்; அச்சிகரங்களுள் ஒன்று மாதோட்டத்தில் விழுந்தது; அங்கு அகத்தியர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார்: இந்தத் தலத்திலே, கேது, துவஷ்டா, மண்டோதரி, முதலான பலர் பூசித்துப் பல்வேறு நற்பேறுகளை எய்தினர்: இவை புராணச் செய்திகள்.

இவற்றை விரித்து ஐந்து படலங்களிலே பண்டிதர் பாடியுள்ளார். இவற்றுள்ளே, 'துவஷ்டா அரசு செய் படலம்' பல சுவையான பகுதிகளைக் கொண்டுள்ளது.

விசுவப் பிரமத்தின் ஐந்து முகங்களுள் ஒன்றிலிருந்து மகா துவஷ்டா என்பவன் தோன்றினான். விஸ்வகன்மறு என்றும் பெயர்பெற்ர் இரும்பு, செம்பு, பொன், மரம், கல் ஆகியவற்றைக் கொண்டு தொழில் புரியும் வர்க்கத்தார் அனைவருக்கும் இவனே குல முதல்வன் என்பது புராண மரபு.

இப்படியானமகாதுவஷ்டா, கேதீச்சர நாதனைப் பூசித்து வரம் பல பெற்றனாம்; அவன் மகாதுவஷ்டா புரம் என்னும் பெருநகரை அமைத்து அங்கு அமர்ந்து அரசு செய்தானாம்; அங்கு காந்தக் கோட்டை ஒன்று அமைந்திருந்ததாம்.

அந்தக் கோட்டையைச் சுற்றித் தமது கற்பனையை நன்கு படரவிட்டிருக்கிறார் நூலாசிரியர். சிறிய குண்டூசி முதல், பெரியகாந்தக் கோட்டை வரை. குறியதள்ளு வண்டிமுதல், பெரிய பாய்க்கப்

12ம் பக்கம் பார்க்க

## தமிழ்

8ம் பக்கத் தொடர்ச்சி

வேத்தியல் பொதுவியல்
என்றிரு திறத்தி
நாட்டிய நன்னூல் நன்கு
கடைப்பிடித்
திசையோன் வக்கிரித்
திட்டதையுணர்ந்தாங்
கசையா மரபி னதுபட
வைத்து
மாற்றோர் செய்த வசை
மொழியறிந்து
நாத் தொலைவில்லா
நன்னூற் புலவனும்
(வரி— 37— 44)

என அச்சுட்டு அமைகிறது. இதிலே நன்னூற்புலவன் என்று குறிக்கப்பெறும் இலக்கிய ஆசிரியன் இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தமிழும் அறிந்தவனாகத் திகழ்பவன் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. மேற்குறித்த சந்தர்ப்பத்தில் நாட்டியம் என்ற துறைக்குத் துணை நிலையில் அமையும் இலக்கிய ஆசிரியன் இயல்பு கூறப்படுவதால் அவனுக்கு முத்தமிழ் அறிவுத்தகுதி சுட்டப்பட்டது எனலாம். எனிலும் பொதுவாக மொழிப் புலமையிற் துறைபோனவனாக இலக்கிய ஆசிரியன் கருதப்பட்ட ஒரு சிந்தனைச் சூழலை மேற்படி பகுதி உணர்த்தும். மேற்படி 'நன்னூற் புலவனை'க் 'கவி' எனக்குறிக்கும் தகவல் ஒன்றும் மேற்குறித்த அரங்கேற்றுக் காதையில் உளது. 'கவியது குறிப்பு' என வரும் தொடருக்கு (வரி: 33) இயற்புலவன் நினைத்த கோட்பாடு' என உரை கூறப்பட்டுள்ளது. கவி என்ற இச் சொற்பயிற்சி பின்னர் தனியே நோக்குதற்குரியது.

(வளரும்)

## மன்மதரா.

6ம் பக்கத் தொடர்ச்சி

வைத்து ரி.வி யில் காதல் படங்களைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் சைக்கிள் வண்டியில் மூலை முடுக்குகளிலெல்லாம் உல்லாசமாகப் பவனிவரும் இளசுகளும் ஒருவரையொருவர் சட்டம் தளர்த்தப்பட்டதும் விரும்பத்தொடங்கி விடுவார்கள். இவர்களுக்கு அனுசரணையாக நானும் மலர்ப் பாணங்களைப் போடத் தானே வேண்டும்.

சுவாமி மலர்ப்பாணங்களைப் போடும்போது சற்றுக் கவனமாக இருந்தால் நல்லது. நல்ல ஆழமான காதலேற்படும் படியான அசல் மலர்ப் பாணங்களைப் போடுங்கள்! சாதி மதம்; சீதனப் பிசாசு இவற்றை அடித்து நொருக்கக்கூடியதாகத் தங்களது மலர்ப்பாணங்கள் அமைந்தால் நல்லது. 'சரி செய்கிறேன்!

'மன்மதரே ஏதோஅவசர ஜோலி இருப்பதாகக் கூறினீர்களே? 'ஆமாம் அப்பொழுது நான் புறப்படலாமா? 'தாராளமாக நீங்கள் இங்கே வந்து வசிக்கும்போது நல்ல மலர்ச் சோலையாகத் தேடிப் பிடித்துத்தருவது என் பொறுப்பு! 'மிக்க மகிழ்ச்சி! 'மகிழ்ச்சி என்று கூறி மலர்ப் பாணத்திலே கையை வைக்காதீர்கள் மன்மதரே: நான்ஏற்கனவே நொந்து போயிருக்கிறேன்! 'நல்ல புத்திசாலியப்பா நீ!'

## மருத்துவ

9ம் பக்கத் தொடர்ச்சி

தடுத்து சொல்லிக் கொண்டேயிருந்தால் உள்மனம் நம்பும் இதைத்தான் இன்றைய தொடர்பு சாதன விளம்பரதாரர்களும் கையாள்கின்றனர்.

பிறந்த குழந்தை திரும்ப திரும்ப சொல்லப்படும் அம்மா என்ற வார்த்தைகளை கவனித்து 'அ...ம் மா' என்று சொல்ல ஆரம்பிக்கிறது. திரும்ப திரும்ப சொல்லப்படும் இக்கட்டளை முறை குழந்தையின் பிஞ்சு மனதில் பதிவதும் ஹிப்னாடிசம் தானே.

ஹிப்னாடிசம் ஓர் சர்வரோக நாசினி அல்ல ஆனால் அதைநாம் எவ்வளவு தூரம் மருத்துவத் துறையில் பயன்படுத்தலாம்என்றுநோக்கினால் அதனால் ஆகாதது ஒன்றுமில்லை. உடலுறுப்பு. செயல் திறன் குறைவு, தொற்று நோய், உறுப்புக் கோளாறு போன்ற இன்னோரன்ன நோய்களை இதன் மூலம் விரட்டலாம். தூக்கமின்மை, தாழ்வு மனப்பான்மை, அஸ்மா,ஆண் —பெண் உறவு, குறைபாடு, கணவன் மனைவி தகராறு, சந்தேகநோய் போன்ற உளக் குறைகளை நீக்கும் மருந்து ஹிப்னாடிசம்.

நோய்களுக்கு தடுப்பூசி போடலாம். ஆனால் உள நோய்களுக்கு போடமுடியுமா இதற்கு தடும்பு கருவியாகவே ஹிப்னாடிசம் விளங்குகிறது.

கவலைகள், ஏக்கம், ஏமாற்றம், பீதி, மனசாட்சி விளைவு இவற்றி உறைவிடம் உள்மனம் உள்மனதை நேரடியாக சந்தித்து போரிட்டு இந்நோய்களை விரட்ட ஹிப்னாடிச முறை ஒன்று தான் நம் கைவசம் உள்ளது.

## உலகக்

11ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றபோது உருகுவே பிரேசிலை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. நடைபெற்ற 23 போட்டிகளில் 88 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியை 200 000 பேர் வரை கண்டு களித்தனர்.

5. 1954 ம் ஆண்டு 5 வது போட்டி சுவிற்சலாந்தில் நடைபெற்றது, மேற்கு ஜேர்மனி கங்கேரியை 3:2 என்ற கோல்கள் விகிதத்தில் வெற்றி கொண்டது. இப்போட்டித் தொடரில் நடைபெற்ற 26 போட்டிகளில் 140 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியைப் பார்வையிட 60000 பேர் வரையில் சமூகமளித்திருந்தனர்.

6. 1958—ல் 6 வது போட்டி சுவீடனில்நடைபெற்றது. இப்போட்டியில் பிரேசில் சுவீடனை 5:2 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. நடைபெற்ற 35 பந்தயங்களில் 126 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியைக் கண்டு களித்தோர் 50000 பேர் மட்டுமே.

7.1962 ம் ஆண்டில் நடை 7 வது போட்டி சிலியில் நடைபெற்றது. இத்தொடரில் 32போட்டிகளில்போடப்பட்ட கோல்களின் எண்ணிக்கை 89 ஆகும். இறுதிப் போட்டியில் பிரேசில் செக்கோசிலோ வாக்கியாவை வெற்றி கொண்டது. பார்வையாளர்களாக ஏறக்குறைய 70000 பேர் மட்டில் இறுதிப் போட்டிக்கு வந்திருந்தனர்.

8.1966 ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து மேற்கு ஜேர்மனியை 4:2 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இத்தொடரில் இடம்பெற்ற 32 போட்டிகளில் போடப்பட்ட கோல்களின் எண்ணிக்கை 89 ஆகும். இறுதிப் போட்டியை 100000 பேர் மட்டில் நேரில் கண்டு களித்தனர்.

9.1970 ம் ஆண்டு போட்டி மெக்சிக்கோவில் நடைபெற்ற போது பிரேசில் இத்தாலியை 4:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி கொண்டது. இத்தொடரில் நடைபெற்ற 32 போட்டிகளில் 95 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியை நேரிற்காண 177000 பேர் வரையில் வந்திருந்தனர்.

10.1974 ம் ஆண்டு ஜேர்மனில் இடம்பெற்ற 10 வது போட்டியில் மேற்கு ஜேர்மனி ஒல்லாந்தை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. இப்போட்டித் தொடரில் நடைபெற்ற 38 போட்டிகளில் 97 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியைக் கண்டுகளித்தவர்களின் எண்ணிக்கை 78 000 ற்கும் மேல் ஆகும்.

11.1978ல் 11 வது போட்டி ஆஜென்டீனாவில் இடம்பெற்ற பொழுது ஆஜென்டீனா ஒல்லாந்தை 3:2என்ற விகிதத்தில் வெற்றி கொண்டது. இத்தொடரில் நடைபெற்ற 38 ப் போட்டிகளில் 102 கோல்கள் போடப்பட்டன. இறுதிப் போட்டியை நேரிற் கண்டுகளித்தோர் தொகை 77 000 மேல் ஆகும்.

12.1982 ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற போட்டியில் இத்தாலி மேற்கு ஜேர்மனியை 3:1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. இத்தொடரில் நடைபெற்ற 52 போட்டிகளில் 146 கோல்கள் போடப்பட்டன. இறுதிப்போட்டியில்1 15 000 திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

13.1986ம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற 13 வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி மெக்சிக்கோவில் நடைபெற்றபொழுது ஆஜெடீனா மேற்கு ஜேர்மனியை 3:2 என்ற கோல்களின் அடிப்படையில் தோற்கடித்து 13 வது உலகக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது,

## பாரிய

11ம் பக்கத் தொடர்ச்சி

பல் வரை, பல்வேறு பொருள்களையும் இயற்றும் தொழில் நுட்பத் திறமை அந்த நகரத்தவர்களுக்கு இருந்ததாம். அவர்கள் விண் வெளியிற் செறிந்துகிடக்கும்மின்காந்தத்தைப் பிரித்தெடுத்து ஏவல் கொள்ளும் நுட்பத்தைக் கூட அறிந்திருந்தார்களாம். இந்த ஆற்றலை 'விஸ்வ ஆற்றல்' என்றுபண்டிதர்குறித்துச்செல்கிறார்.சூரிய ஒளியிலிருந்து சக்தியைக் கறந்தெடுக்கும் வல்லமை அவர்களுக்குஇருந்ததென்றும் பாடுகிறார். இந்த நகரத்துத் தொழில்நுணுக்கர்கள் நுண்ணிய பட்டாடைகளை நெய்தார்களாம்; விசித்திரமான நகை வகைகளைச் செய்தார்களாம்.

இயந்திர விசிறிக் காற்றுக் கூடமாதோட்ட நகரிலே இருந்தது என்று புலவர் பாடுகிறார்.

இப்படியெல்லாம் தமது கற்பனையை விரிப்பதற்கு நிகழ்கால நவீன உலகின் புதுமைகளைக் கண்ட காட்சி அநுபவம் பண்டிதருக்குத் துணை நின்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

புராதன காலத்திலே மகோன்னதமுற்று விளங்கிய மாதோட்டம், மாந்தை என்று பெயரையும் பெற்றுப் புகழ்மிக்கத் துறைமுகமாக விளங்கிய செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்லுகிறது. 'மாந்தை விகாசப்படலம் என்னும் பகுதி இந்தப் படலத்திலும், அடுத்து வரும் 'விஜயன் வருகைப் படலத்திலும்', சிங்களவர் மிக விரும்பும் 'மகாவம்சத்தில் வரும் ஐதிகங்களைத் தழுவி நூலாசிரியர் தமது மான்மியத்தை நடத்திச் செல்லுகிறார். சிங்களவரின் மூதாதை என்று கருதப்படும் விஜயன் சைவப் பற்றுள்ள ஒருவன் என்று சித்திரிக்கப்பட்டுள்ளான். அவன் சைவத் திருப்பணிகள் பலவற்றைச் செய்தவன் என்னும் செய்தியும் விதந்து பேசப்படுகிறது,

முதலாவதாகிய'புராதன காண்டம்'''விஜயன்வருகைப் படலத்துடன் நிறைவு அடைகிறது. இன்னும் ஐந்து காண்டங்கள் வெளிவரக் காத்திருக்கின்றன. இப்பொழுது எழுதப்பட்டுள்ள பகுதியின் போக்கை நோக்கினால், ஏறத்தாழ ஐயாயிரம் விருத்தங் கொண்ட பெருநூலாக இது வளரும்.

பண்டிதரின் திட்டம் பெரியது; பாரியது; அவரது வினைத்திறனும், செயலூக்கமும் அவர் மேற்கொண்ட பாரிய பணி இடையூறு படாமல் முழுமை எய்தத் துணை நிற்கும்,

இறுதியாக ஒரு குறிப்பு— இப்புத்தகத்தில் வருஞ் செய்யுள்களைப் படித்து விளங்கி நயப்பதற்கு வேண்டிய தமிழறிவு நம்மவர்களிற் பலருக்கு இன்று இல்லை. அவ்வித கிரகிப்புச் சக்தியை நம் சமூகத்தின் ஒரு சிறு பகுதியினராவது பெற்றுக் கொள்ள வேண்டும் அவ்வாறான சிறப்பறிஞர் வாயிலாக என்றாலும் பழந்தமிழின் நலனையும், பலனையும் நாம் பெற்றுக்கொள்ளலாம் அல்லவா? அவ்வகையான சிறப்பறிவுத் தேர்ச்சியைப் புறக்கணிப்பது எவ்வளவு பெரிய நட்டம்?

## சிறுகதை

5ம் பக்கத் தொடர்ச்சி

வது கதையைப் பிரசுரித்த பெருமை அச் சஞ்சிகையையே சாரும் என்று பின்னர் அச் சஞ்சிகையிலேயே பிரசுரமாகியிருந்தது,

பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் சாந்தனைப்பற்றிக் குறிப்பிடும்போது கூரிய நுண் காட்சித் திறம் சுற்றி வளைக்காமல் நேரடியாகப் பொருளுக்கு வருந்தன்மை விஷயத்திலிருந்து ஓரளவு விலகி நிற்கும் நடுநிலை நுணுக்க விவரத்தில்.

கடைப்பிடிக்கும் கட்டுப்பாடான சிக்கன. எளிமை காணப்படுகின்றது என்று குறிப்பிட்டமையை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர விரும்புகின்றோம்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் மல்லிகை வெள்ளி விழா மலரில் இலக்கியமுதிர்ச்சிப்பே ாக்கினைக் காட்டிய முக்கியமானோருள் சாந்தன், நந்தி, தெணியான் ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. சாந்தன் அவர்கள் ஒரு எழுத்தாளன் மட்டுமல்ல சிறந்த ஓவியரும் கூட. இவர் பார்வை (சிறுகதைத் தொகுதி) கழுகு(குறுங்கதைத் தொகுதி) ஒரே ஒரு ஊரிலே (சிறுகதைத் தொகுதி) ஆரைகள் (இருநெடுங்கதைகள்)ஒளி சிறந்த நாட்டினிலே (சோவியத் பயணநூல்) ஆகிய நூல்களுக்கான அட்டைப்பட ஓவியத்தைத் தானே வரைந்துள்ளார்.

இவரது முளைகள் என்ற சிறுகதைத் தொகுதியும், கிருஷ்ண தூது என்ற சிறுகதைத் தொகுதியும் இந்தியாவிலே பிரசுரமாகியவையாகும்.

இவரது ஒரே ஒரு ஊரிலே என்ற சிறுகதைத் தொகுதி 1975ஆம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை சோவியத் நட்புறவுக் கழக வெள்ளிவிழாக் கட்டுரைப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்று சோவியத் நாட்டிற்குப் பயணம் செய்யும் வாய்ப்பையும் தட்டிக்கொண்டார்.

இவரது சில கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டு'இலஸ்ரேட்டெட் வீக்லி ஒவ் இந்தியா' உட்பட வேறு சில சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

கடந்தவாரம் ஆங்கில எழுத்தாளர்கூட்டுறவுப் பதிப்பக வெளியீடான சனல்ஸ் CHANNELS என்ற தொகுப்பிலும் இவரது கதை வெளியாகியுள்ளது.

அடக்கமாக, அன்பாகப் பழகும் சுபாவம்கொண்ட திரு. சாந்தனைப்பற்றித் தொடர்ந்து எழுதிக் கொண்டே போகலாம், அவர் சமுதாயத்தில் புகழ் பெற்ற எழுத்தாளராக இருந்த போதிலும் தன்னடக்கத்துடன் நடந்துகொள்வது இவரது சிறப்பிற்குக் காரணம் என்று கூறலாம்.

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் சிவில் பொறியியல் துறைப் போதனாசிரியராக திரு. சாந்தன் தற்போது கடமையாற்றிவருகின்றார்.

ஈழத்துத்தமிழ் இலக்கியத்தில் தேசிய இனப்பிரச்சினை எவ்வாறு எடுத்துக் கையாளப்படுகின்றது என இப்போது பலர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனால் இப்போது எதிர்பாராதவிதமாக இவரது படைப்புக்கள் முக்கியத்துவம் பெறத்தொடங்கிவிட்டன.

தேசிய இனப்பிரச்சினையில் இலக்கியத்தின் பங்கு என்ற வினா எழும்போது சாந்தனை எவராலும் ஒதுக்கி விடமுடியாது.

25 வருடங்களாக எழுத்துலகில் நிலைத்து நின்று கருத்துக்களை ஆணித்தரமாகச் சாந்தன் சொல்லிவருகின்றார் என்றால் அவரது தொலைநோக்குப் பார்வையே அதற்குக் காரணம் என்று சொன்னாலும் மிகையாகாது.

## பறவைகளின்

3ம் பக்கத் தொடர்ச்சி

என்று அன்னத்தைச் சொல்லி முடிவு கட்டினான். அவன் சொல்லியது வீண்போகவில்லை. அங்கே அன்னம் இருந்தது. அது ஒதுங்கி ஒதுங்கி அசைந்து அசைந்து நடந்தது அந்தக் காட்சியைக் கண்ட இராகவன் தன்னருகே உள்ள சீதையையும் அவளது நடையையும் கண்டு சிறுமுறுவல் கொண்டானாம்.

'ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழைய ளாகும்
சீதைதன் நடையைக்
கண்டு சிறியதோர் முறுவல்
செய்தான்.'

இந்த அன்னத் தொடர்கதை இத்துடன் முடிகிறதா? இல்லையே. மேலும் செல்கிறது. வீடணனை அடைக்கலம் பெறற்குமுன் கடற்கரை அருகே வந்த இராமன் இலங்கையிலே உள்ள பிராட்டியை நினைந்து சோகம் எய்துகிறான். அவனது சோகக் காட்சியிலே முதற்கண் படுவது அன்னம்தான்.

கூதிர் காலத்து நுண்ணிய குறும்பனித் துளிகளைக் காற்றாலே மோதிக்கொண்டு அலை வருகிறது. வளைந்த தாழையின் மேல் பாதி இறக்கைக்குள்ளே பெண் அன்னத்தைப் பக்கத்திலே அணைத்துக்கொண்டு ஆண் அன்னம் உறங்குகிற காட்சியைக் கண்டு தன் பிரிவினை நினைந்து பெருமூச்சு விடுகிறான். அவன் உள்ளத்திலே பறவைக்காட்சியின் மூலம் வாழ்க்கைப் போராட்டம் முழுவதுமே வந்து விடுகிறது.

இரண்டாவது காட்சி: அருந்துவதற்கு இனிய மீன் கொணரத் தன்னைப் பிரிந்து சென்ற சேவலை நினைத்து அது வருகின்ற திசையை நோக்கி ஒரு வெண் குருகு-பெண் குருகு வருந்துகின்றதைக் காண்பான்இராகவன். மானின் பின் சென்ற சுருதி நாயகன் வரும் வரும் என்பதோர் துணிவால் கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாளாகச் சீதை இலங்கையில் இருக்கின்ற நினைப்பு வருகிறது.

அடுத்தவாரம் முடியும்

(நன்றி : புதுச்சேரி கம்பன் விழா மலர்)

# பொடிச் செய்திகள்

## பேச்சு, கட்டுரை போட்டி முடிவுகள்

(வண்ணார்பண்ணை)

தேசிய வீரர்கள் தினத்தை யொட்டிக் கல்வியமைச்சின் பணிப்பின்பேரில் யாழ் கோட்டப்பிரிவுப் பாடசாலை மாணவர்களுக்கிடையேநடைபெற்ற பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் பின்வருவோர் முதல் ஐந்திடங்களையும் பெற்றுள்ளனர்.

### பேச்சுப் போட்டி

மேற்பிரிவு:—

த. மீரா, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, ச. லவீசன் யாழ். பரியோவான் கல்லூரி, மா. மதுமதி, யாழ் — இந்து மகளிர் கல்லூரி, யே. பிரேமதாஸ், யாழ்—சென். ஜோசப் வித்தியாலயம், க. வில்சன் யாழ்—நாவாந்துறை றோ. க. பாடசாலை.

கீழ்ப்பிரிவு:—

ஜே. ஜசிதா யாழ் — இந்து மகளிர் கல்லூரி, வி. பார்த்தீபன் யாழ்—மத்திய கல்லூரி, க. விஜிதா யாழ்—நாவாந்துறை றோ. க. பாடசாலை. ச. லிங்காயினி யாழ் — வேம்படி மகளிர் கல்லூரி, டொ. றெஜீவ்ரன் யாழ் — சென் ஜோசப் வித்தியாலயம்.

### கட்டுரைப்போட்டி

மேற்பிரிவு

செல்வி எம். ஆர் நிஷ்மி யாழ். கதீஜா ம. வி. பொ.சுந்தரமூர்த்தி,நல்லூர்ஸ்தானசி. சி.ரி.எம்.பாடசாலை, செல்வி க. சுஜோஜனாயாழ்.இந்து மகளிர் கல்லூரி. செல்வி மு. இ. ஷிபா,யாழ், கதீஜா ம, வி, செல்வி சி. உதய யோகேஸ்வரி, கைதடி குருசாமி வித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு

வி. பார்த்தீபன் யாழ், மத்தியகல்லூரி, செல்வி க. கனகதீதாயா/கச்சாய் அ, த, க, பாடசாலை தி, நடனசபேசன், யாழ்மத்திய கல்லூரி. செல்வி த, தர்சினி, கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை. செல்வி வி, றஜனியா/நாவற்குழி ம, வி,

## மக்கள் வங்கியில் அட்குநகை மீளளிப்பு

(துணுக்காய்)

மாங்குளம் மக்கள் வங்கியில் அடகு நகைகளை மீள எடுப்பதற்கு 22.9.89 வரை பணம் செலுத்தியோர் தமது நகைகளை அடுத்த மாதம் 20ம் திகதி பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுவரை பணம் செலுத்தாதோருக்கு 30.6.90 வரை வட்டிச் சலுகை வழங்கபபடு மென மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவிக்கின்றார். (ப.8)

## பாவனையாளர் இருவகைத் தாக்கம்

இப்பகுதிகளுக்கடைகளில் பாவனையாளர்களுக்கு விற்கப்படும் கள்ளின் அளவு மிகவும் குறைவாக இருப்பதாக கூறப்படுகின்றது. பெரும்பாலும் முக்கால் போத்தல் கள்ளையே ஒரு போத்தலென அளந்துகொடுக்கப்படுவதாகவும் சிலவேளை அந்த முக்கால் போத்தல் கள்ளும் கலப்பு செய்யப்பட்டே விற்பனை செய்யப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (41)

## தகுந்த ஊதியம் இல்லை எனபுகார்

(கோண்டாவில்)

வாழ்கை செலவுக்கு ஏற்ற முறையில் தோட்ட சொந்தக்காரர்களால் தமக்கு சம்பளம் வழங்கப்படுதிவல்லை என்று இப்பகுதி கூலித் தொழில் புரியும் பெண்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

தோட்டச் சொந்தக்காரர்களால் தம்மிடம் எட்டு மணித்தியாலத்திற்கு மேலாக வேலை பெறப்படுவதா கூறும் இப் பெண்கள் தமக்கு நாளாந்த கூலியாக முப்பது ரூபா வழங்கப் படுவதாகத் தெரிவிக்கின்றனர் மதிய உணவாக பெரும் பாலான இடங்களில் சம்புடன் பானே வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (41)

## அராலியில் வி.போட்டி

(மானிப்பாய்)

அராலி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் தலைமையில் எதிர்வரும் 30 ம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (30)

## மட்டுவில் தெற்கு கந்தசாமி கோயில் மஹோற்சவம்

மட்டுவில் தெற்கு அருள் மிகு வேரற்கேணி கந்தசாமி கோயில் வருடாந்த மகோற்சவம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் விமரிசையாக ஆரம்பமாகின்றது. மஹாற்சவத்தை மட்டுவில் சிறீசக்திதாசன், சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக்குருக்களின் உதவியுடன் மட்டுவில் பிரதிஷ்டாவித்தகர் சிவாகம ஞானசாகரம் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் நடத்திவைப்பார்.

6ம் திகதி தேர்த் திருவிழா நிகழும்.

## வட்டு இந்துவில்

(சித்தன்கேணி)

வட்டு.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முறைசாராக் கல்விப் பிரிவின் 1989 ம் ஆண்டு உடை அமைத்தல் பயிற்சி வகுப்பின் தையல் பொருட்காட்சியும் பொருள் விற்பனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4. 30 மணி வரை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இப் பொருட்காட்சியிலும் பொருள் விற்பனையிலும் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு வைபவத்தைச் சிறப்பிக்கவுள்ளனர். (12)

## வீதி திருத்த வேலைகள்

(உருத்திரபுரம்)

முறிகண்டி-அக்கராயன் வீதித்திருத்தவேலைகள்நடைபெற்று வருகின்றன இதற்கான துரித நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு.க. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

இவ் வீதியின் திருத்த வேலையால் இ.போ' பஸ் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது மறு அறிவித்தல் வரை வன்னேரிக் குளத்திற்கான பஸ் சேவை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ப 6

## ஜாக்குலினுக்குப் புகழாரம்

# தீயவை கண்டு கலங்காமல் தூயவழியில் அற்புதப்பணி

''வடமராட்சிப் பகுதியிலே இந்திய இராணுவத்தின் அராஜகச் செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு பயங்கர நிலைகள் நிலவிக் கொண்டிருந்த வேளைகளிலே பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இணைப்பதிகாரி செல்வி ஜாக்குலினை அனுப்பி இப் பகுதி மக்களுக்கு உயிர் காக்கும் சேவைகளை வழங்கிய பிரான்ஸ் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். செல்வி ஜாக்குலினைப் பாராட்ட வேண்டும்.''

மேற்கண்டவாறு பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி செல்விஜாக்குலின் சேவைகளைப் பாராட்டி பொது மக்களால் நடாத்தப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவிலே உரையாற்றிய இளைப்பாறிய கல்வியதிகாரி திரு.ஏ.வி. தங்கராஜா குறிப்பிட்டார்.

புற்றளை மகா வித்தியாலய மண்டபத்திலே நடைபெற்ற இவ் விழாவிற்கு புலோலி கொத்தணி அதிபர் திரு.வீ. எஸ். ஏகாம்பரநாதன் தலைமை தாங்கினார். விழாவிற்கு வருகை தந்த செல்வி ஜாக்குலினுக்கு பொது மக்கள் மலர்மாலைகளை அணிவித்து வரவேற்றனர்.

தொடர்ந்து உரையாற்றிய திரு.தங்கராஜா குறிப்பிட்டதாவது: இன்றைய எமது போராட்ட காலகட்டத்திலே பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி செல்வி ஜாக்குலின் இப் பகுதி மக்களுக்கு ஆற்றிய உயிர்காக்கும்சேவைஎமது வரலாற்றிலே மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இச் சேவைகள் தமிழீழத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

வடமராட்சிப் பகுதியில் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கர நடவடிக்கைகளினால் மக்கள் வீதியோரங்களில் இரத்த வெள்ளத்தில் மரணமாகியும் காயப்பட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டும் இருந்த



வேளைகளிலே அவ்விடங்களுக்கெல்லாம் செல்வி ஜாக்குலின் துணிவுடன் தனது வாகனத்தில் சென்று வேண்டிய உதவிகளையும், நடவடிக்கைகளையும் மேற் கொண்டிருந்தது எமது வாழ் நாளில் மறக்கமுடியாத சம்பவங்களாகும்.

புலோலி பல நோக்குக்கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தலைவர் திரு பொன். மாணிக்கவாசகர் உரையாற்றுகையில்; குறிப்பிட்டதாவது, பிரான்ஸ் தேசத்திலிருந்து எமது நாட்டிற்கு வந்து மிக இக்கட்டான பயங்கர கால கட்டத்திலேயே எமது மக்களுக்குச் சேவையாற்றிய பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவையும், அதன் இணைப் பதிகாரி செல்வி ஜாக்குலினை யும் அவர்கள் வழங்கிய அரும் பெரும் கிடைத்தற்கரிய சேவைகளுக்காகப் பாராட்ட வேண்டியது முக்கிய கடமையாகும். இந்திய இராணுவ அட்டூழியங்களினால் ஸ்தம்பித்திருந்த வடமராட்சிப் பகுதியின் வைத்திய சேவைகள் மீண்டும் சிறப்பாக நடைபெற இப்பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு ஆற்றிய சேவைகள் இப் பகுதி மக்களின் உயிர் காக்கும் சேவைகளாகும். இச் சேவைகளைவழங்கியபிரான்ஸ் வைத்தியகுழுவினரின்செயலை எமது உயிர் உள்ளவரை நாம் மறந்துவிட முடியாது.

பருத்தித்துறை உதவித்த பாலதிபர் திரு. எஸ். சுப்பிரமணியமும் செல்வி ஜாக்குலின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினார்.

இறுதியாக செல்வி ஜாக்குலின் பதிலுரை வழங்கினார் பதிலுரையில் குறிப்பிட்டதாவது,

தமிழ் எனக்கு மிகப்பிடித்த மொழியாகும். தமிழை நான் நன்கு நேசிக்கின்றேன். ஆனால் எனக்கு தமிழில் பேச முடியாமைக்கு வருந்துகின்றேன். தமிழ்ப் பண்பாடு. தமிழ் மக்களின் விருந்தோம்பல் என்பன மிக உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளன.அவை என்னை மிகக் கவர்ந்துள்ளன. இப்பகுதியில் நான் மேற்கொண்ட வைத்தியசேவைகளுக்காக நீங்கள் என்னைப் பாராட்டுவதனால் நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்' என்றார்.

செல்வி ஜாக்குலினுக்குப் பொதுமக்கள் அன்பளிப்புக்களும் வழங்கினர். திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும். வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்களின் 'காத்தவராயன்' நாடகமும் இடம் பெற்றன. (15)

# பாகிஸ்தான் பொலிஸ் நிலையங்களில் சித்திரவதை

பாகிஸ்தானில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

சில சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு கசையடியும் வழங்கப்படுகின்றது என லண்டன் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2,029 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தானில் மனித உரிமை மீறல்கள் தற்போது வெகுவாகக் குறைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருப் பினும் தொடர்ந்த வண்ணமிருக்கும் சில மனித உரிமை மீறல் சம்பவங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படுவது அவசியம் என மேற்படி சபை தெரிவித்துள்ளது.

பிரதமராக பெனாசிர் பூட்டோ பதவி ஏற்றதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட விபரங்களின் படியே மேற்படி கருத்தை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டது.

## சுண்டுக்குளியில்

திருவாசகம் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு 43ஏ, விதானையார் வீதி சுண்டுக்குளியிலுள்ள சபைப் பணி மனையில் நடைபெறும் என்று இணைச் செயலாளர் திரு. த. துரைராசா தெரிவித்தார். (36)

## புத்தூர் மேற்கில்

புத்தூர் மேற்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் வளர்மதி சனசமூக நிலையத்துடன் இணைந்து நடாத்தி வரும் 12வது மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சியும், பரிசளிப்பு விழாவும் இன்று இடம்பெறும். இன்று காலை நிகழ்சிகளாக பின்வருவன இடம் பெறும். 1.மரதன் ஓட்டம் 15 மைல் (யாழ்மாவட்டம்) 2.சைக்கிள் ஓட்டம் 40 மைல்(ஆண்கள்அகிலஇலங்கை ரீதியில்) 3.சைக்கிள் ஓட்டம் 25 மைல் (ஆண்கள் புத்தூர் மேற்கு கிராம சேவகர் பிரிவு) 4.சைக்கிள் ஓட்டம் 15மைல் (பெண்கள் - யாழ்மாவட்டம்)

இரவு நிகழ்ச்சிகளாக கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்) 6பேர், 4பேர் கொண்டது. செஇஅப் போட்டி' பெண்களுக்கான எறிபந்தாட்டப் போட்டி என்பனவும் இடம் பெறும்.

## காரைநகரில்

(சித்தன்கேணி)

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று காலை 8.30 மணிய ளவில் வித்தியாலய அதிபர் திரு. கு. கதிரவேலு அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலர் திரு.மு. சிவராசரத்தினம், காரைநகர் கொத்தணி அதிபர் திரு மு. திருநீலகண்டசிவம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (12)

## வட்டு சனசமூக நிலையத்தில்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி காந்திஜீ சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் காந்திஜீ சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று பிற்பகல் 4 30 மணியளவில் நிலையத் தலைவர் திரு. அ. முருகவேள் தலைமையில் நடைபெறவுள்ளது.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சின்னத்தம்பி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விசேட உரை நிகழ்த்துவார்கள்.

நடப்பாண்டு நிர்வாக சபைத் தெரிவும் இக்கூட்டத்தில் இடம் பெறும். (12)

## ஒலியின் வாகனம்

மேல்மாகாண எதிர்க் கட்சி உறுப்பினர் ஒஸி அபேகுணசேகராவின் வாகனத்தின்பின் புறக்கண்ணாடியில் இவ்வாகனம் மக்களின் சேவைக்காகப் பெறப்பட்டது என்ற வாசகம் காணப்படுகிறது. அரச வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவருவதாக செய்திகள் வரும் இச்சமயத்தில் ஒஸியின் செயல் எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்கின்றது.

# சிறிய செய்திகள்

## யாழ் கல்வித் திணைக்களத்தில் கூட்டம்

தேசிய கூட்டுறவுச் சபையினூடாக உலக வங்கிக் கடன் திட்டத்திலிருந்து கடன் பெற விண்ணப் பித்தவர்களுக்கான கூட்டம் இன்று காலை 9-00 மணியளவில் யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் தாங்கள் ஆரம்பிக்கப்படவுள்ள தொழில் பற்றிய விபரங்களுடனும், பிணையாட்கள் பற்றிய விபரங்களுடன் கூட்டத்தில் சமூகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (4)

## தடகள போட்டி

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அமைப்புக்குழுவின் தடகள போட்டிகள் இன்று மாலை 3.00 மணிக்கு தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் அன்ரன்அல்பிரட் கலந்து கொள்வார்.

## காங்கேசனில் ஆண்டு விழா

காங்கேசன்துறை லங்கா சிமேந்து நிறுவன கலை,இலக்கிய வட்டத்தின் முதலாவது ஆண்டு விழாவும் சஞ்சிகை வெளியீடும், இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் ஆலை முகாமையாளர் திரு. ம. ஜனநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஓய்வூதியர் சங்க வேண்டுகோள்

வடபகுதியில் அபிவிருத்தி நிவாரண சேவைகளை மேற்கொள்ளுமாறு வடமாகான ஓய்வூதியர் சங்கம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழுபில் உள்ள வெளிநாட்டு தூதுவரா லயங்களுடன் இதுதொடர்பான பேச்சுக்களை இச்சங்கம் நடாத்தி வருகின்றது. விரைவில் நிவாரண உதவிகள் கிடைக்குமென வடமாகாண ஓய்வூதியர் சங்கத் தலைவர் இராமநாதன் தெரிவித்தார். (03)

## ஜெயராஜ் சொற் பொழிவு

மனித தத்துவத்தை வளர்ப்பதில் சமயங்களின் பங்கு என்னும்பொருள் பற்றி அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்கள் இன்று மாலை 4 மணிக்கு இல 50 இரண்டாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் உள்ள மறையகத்தில் சொற்பொழிவாற்றுவார்.

## 108கைதிகள் விடுதலை

நேற்று யாழ் பெருமாள் கோவிலடியில் விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 108பேர் பெற்றோர்கள் உறவினர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டார்கள்.

இவ்விடுவிப்பின் போது விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியின் வலிகாமம் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு.ஆஞ்சிநேயர் திரு.பொன்மாஸ்டர் ஆகியோர் கலந்துகொண்டனர். (03)

## மிதிவெடியில் கால் இழப்பு

நேற்று முன்தினம் 24.05.90 காங்கேசன்துறை இராணுவ முகாம் அருகே மிதிவெடியில் சிக்கிய மாடு ஒன்று தனது காலை இழந்தது, (48)

## காங்கேசன் திஸ்ஸ விகாரை முகாமானது

காங்கேசன்துறை திஸ்ஸ விஹாரை இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டு வருகிறது முகாமைச்சுற்றி டயர் அடுக்கி முட்கம்பியும் அடிக்கப்பட்டுள்ளது. (48)

## சங்காபிஷேகம்

நுணாவில் சந்தி முருகன் ஆலயத்தின் சங்காபிஷேக இறுதிநாள்இன்றாகும். இன்று மாலை 6 மணி தொடக்கம் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

நாதஸ்வர நிகழ்ச்சி மற்றும் இன்னிசை நிகழ்ச்சி போன்ற பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

---

## காலமானார்

## சடையர் பரமு

### பூநகரி

மட்டுவில் நாடு கிழக்கு, பூநகரியைச் சேர்ந்த சடையர் பரமு அவர்கள் 26 5-90 அன்று காலமானார். அன்னார் காமாட்சிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், ஆனந்தவடிவேலு, ஆனந்தலட்சுமி, சதானந்தலட்சுமி, குகானந்தலட்சுமி (ஆசிரியை கண்டி மகளிர் கல்லூரி) சண்முகானந்தன், திருமூர்த்தி ஆனந்தன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகம், இராஜரட்ணம் (கிராமசேவையாளர் பூநகரி) யோகலட்சுமி, கணேசன், சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-5-90 ஞாயிறு பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கா. கணேசமூர்த்தி,
வாடியடி,
பூநகரி.

05179

---

# அரசின் நடவடிக்கை பெரும் சந்தேகம் -செங்கதிர்

''ஸ்ரீ லங்கா அரசின் அண்மைக் கால நடவடிக்கைகள் எம்மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கை நீடிக்குமாயிருந்தால் இதற்கான முழுப் பொறுப்பையும் இலங்கையரசே ஏற்றுக் கொள்ள வேண்டும்''

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயற்குழு உறுப்பினரும், கட்சி உப அமைப்பாளரும், கலை, கலாசார உதவிப் பொறுப்பாளருமாகிய திரு செங்கதிர் கரவெட்டியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்.

இளம்புலி வள்ளுவன், இளம் புலி பபி (அருள்) ஆகியோரின் முதலாண்டு அஞ்சலிக் கூட்டத்திற்கு மக்கள் முன்னணியின் வடமராட்சி அமைப்பாளர் திரு. அரசண்ணா தலைமை வகித்தார். திரு, செங்கதிர் தொடர்ந்து பேசுகையில்.

''எமதுபிரதேசங்களில் விமானங்கள் மூலம் வேவுபார்க்கின்றார்கள். பெரும் தொகை இராணுவ வீரர்களை குவித்து வருகின்றார்கள். இந்நடவடிக்கைகள் அனைத்தையும் உற்று அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றோம். இலங்கை அரசு எம்மை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டால் அது தன்னைத் தானே ஏமாற்றியதாகவே கொள்ளப்படும்'' என்றார்.

இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சி பொறுப்பாளர் திரு குணம் பேசுகையில்; எமது மக்களை பாதுகாப்பதற்காகவும் எமது மண்ணினை மீட்பதற்காகவும் நாம் பல அரிய தியாகங்களைச் செய்துள்ளோம் இந்த தியாகங்களினால்தான் நாம் இன்று இந்த இடத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். என்றார்.

இவ் வைபவத்தில் வடமராட்சி மக்கள் முன்னணி மக்கள் தொடர்பாளர் திரு. ஸ்ரனிலஸ் நெல்லியடி பிரதேசப் பொறுப்பாளர் திரு. குணபால் வடமராட்சி கிழக்கு மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் லூசியா, கவிஞர் முருகுரத்தினம் உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள். திரு. க. வல்லிபுரம் நன்றி நவின்றார். (18)

## ஆசிரிய இடமாற்றங்கள் மாகாண சபையிடம் வழங்கப்படும்

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. எனினும் பயிற்சி ஆசிரியர்கள், கஷ்ட பிரதேச ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய மாகாண சபைக்கு அதிகாரம்வழங்கப்படவில்லை

இடமாற்றங்கள் பற்றி ஏதேனும் முறைப்பாடு தெரிவிக்க விரும்பின் தமது முறைப்பாட்டை எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட மாகாணகல்வி பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு இடமில்லை

ஐ நாவின் மனிதஉரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு இம்முறை இடம் கிடைக்கவில்லை ஆணைக்குழுவில் இடம் பெறுவதற்காகநியூயோர்க்கில் நடைபெற்ற வாக்கெடுப்பில் இலங்கைக்கு 14 வாக்குகள் மட்டுமே கிடைத்தது.

மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெற ஆசிய நாடுகளான சீனா, யப்பான், இலங்கை போட்டியிட்டன. எனினும் ஜப்பானும், சீனாவுமே தேர்ந்தெடுக்கப்பட்டன.

## கிளிநொச்சி கூட்டுறவு விழா

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் யூலை மாதம் கூட்டுறவு தின விழா ஒன்றை நடாத்த விருக்கின்றது.

இக் கூட்டுறவுத் தின விழாவிற்கு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து பேச்சு, கவிதை, கட்டுரை, ஓவியம், நாடகம் போன்ற ஆக்கங்கள் நடாத்தப்பட இருக்கின்றன.

இப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு சிறந்த பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. (43)

## அஞ்சலி

உடல்நிலை பாதிப்பால் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் நிசந்தன் (வில்வரத்தினம் ஜெயரத்தினம்) கோணேஸ்புரம் நேற்று மரணமானார் இவருக்கு புலிகள் இயக்கம் அஞ்சலி தெரிவித்துள்ளனர்.

## மின் தடை

சுன்னாகம்— யாழ்ப்பாணம் பாரிய மின் திருத்தவேலைகள் ஞாயிறு காலை 8மணி தொடக்கம் மாலை 5மணி வரை நடைபெறவுள்ளதால் பின்வரும் இடங்களுக்கு மின்சாரம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அராலிவீதி, கண்ணாபுரம், பண்ணை, குருநகர்,மடத்தடி, மண்டைதீவு, கனகரட்ணம் வீதி, அரியாலை,உப்புக்குளம், பாஷையூர்.

### 6 வது...

வரும் என எதிர்க்கட்சி தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவசரகாலச்சட்டம்மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயேஎதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

### தொழில் ..

வர்களுக்கான இலங்கை வங்கிக் கடனுதவி பற்றிய கலந்துரையாடலின் போது மேற்படி தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது முறைசாராகல்வி பிரிவில் பயிற்சியை முடித்தவர்களுக்கு கடனுதவி கோரும் விண்ணப்பபடிவமும் வழங்கப் பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் வங்கி இத்தகைய கடன் வழங்கும் முயற்சியை ஆரம்பித்த போதிலும் அது நடைமுறைப் படுத்தலில் தாமதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### சில கூட்டுறவு—

ஆனால் நேற்று முன் தினம் குறைக்கப்பட்ட அரிசி, சீனிகளின் விலைகள் இன்னமும் குறைக்கப்படவில்லை இது குறித்து பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (48)

### நெருக்கடி—

கள் இந்நிகழ்ச்சியின் போது விடுவிக்கப்பட்டார்கள்.

திரு. ஆஞ்சிநேயர் அங்கு மேலும் பேசுகையில் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளால் கைதிகள் விடுவிப்பை இடைநிறுத்துமாறு பலர் கேட்டபோதும் நாம் இவர்களை விடுதலை செய்கின்றோம். சமுதாய வளர்ச்சிக்கும் பெற்றோர்களின் அபிலாஷைகளை தீர்க்கவும் இவர்களை இன்று பூரணத்துவப்படுத்திவிடுவிக்கின்றோம். போராட்ட வரலாற்றுத் தவறை இனி மேலும் செய்யமாட்டீர்கள் என்பது எம் நம்பிக்கை என்று தெரிவித்தார். (03)

### வீதி ..

டாக பராமரிக்கப்பட்டு வந்துள்ளது இவ் வீதி இப்பொழுது இயந்திரத்தால் கிளறப்பட்டு மக்கி போட்டு கிறஷர் மண் வீதியாக்கப்படுகின்றது.

இந்த விந்தையான செயலைக்கண்ட பொது மக்கள் அவமானமும் ஆத்திரமும் உடையவர்களாக ஒன்று திரண்டு வீதி கிளறும் வேலையைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலையை இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த இவ் வீதியில் மூன்று பிரபல்யமான கல்லூரிகள் இருப்பதும் 20 நிமிடத்திற்கொரு மினிபஸ் ஓடுவதும் இவ்வீதியின் பயன்பாடு எவ்வளவு முக்கியமானது என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய சான்றாகும்.

இவ்வீதியின் திருத்த வேலைகளை உடன் நிறுத்துமாறுமுரசொலிக்கு தந்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது (25)

### வடபகுதியில்...

வவுனியா எரிபொருள் நிலையங்களில் இருந்து மாத மாதம் 40 லட்ச லீற்றருக்குமமான எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது இவற்றில் பெற்றோல் மண்ணெண்ணை டீசல் போன்றவை அடங்குகின்றன. (03)

### ஜூன் ..

மறுக்கப்பட்டுள்ளது.

87 ம், 88 ம், 89 ம், ஆண்டுகளில் தே.வீ. அ. அதிகார சபையிலிருந்து வீடமைப் புக்கடனைப் பெற்று இதுவரை பூர்த்தியாக்கப்படாத வீடுகள் ஜூன் மாத இறுதிக்குள் பூர்த்திவாக்கப்பட வேண்டும் மென்றும் இதனை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் வெகு விரைவில் பார்வையிடுவார்கள் என்றும் இதன் பிரகாரமே மீதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படு மென்றும் தெரியவந்துள்ளது

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட்;திருவனந்திரைால்;யாழ்ப்பாண ஸ்ரான்லிவீதி 62ம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 27.05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது